விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஆடி 11 ஷவ்வா 19 இதழ் 167

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (27—7—86)

மாணவர்களுடன்

## காணமல்போன படகு கண்டுபிடிக்கப்பட்டது

யாழ்ப்பாணம் ஞாயிறு

திருமலைக்குச் செல்லும் பொழுது காணமல்போன அகதிகள் படகு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மூலைத்தீவிலிருந்து திருமலைக்கு பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களும் அவர்களின் பெற்றோரும் அடங்கிய மூன்று படகுகள் சென்றதும் அதில் ஒன்று காணமல் போனதும் தெரிந்ததே.

காணமல் போன படகு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாம்.

இப்படகில் சென்றவர்கள் விசாரணை செய்யப்பட்ட பின்னர் புல்மோட்டையில் வைத்து நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா இ)

# தாக்குதலுக்குப் பலியான குருநகரைச்சேர்ந்த கடற்றொழிலாளர் குடும்பங்கள் 3 மாத உணவு பொருள் பெறுவர்

## கிளிநொச்சி அகதிகளுக்கு நிவாரணம்

(அலுவலக நிருபர்)

**படையினரால் படுகொலை செய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த 31 கடற்றொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 3 மாதத்துக்கான இலவச பங்கீட்டு உணவுப் பொருள்களும், கிளிநொச்சியிலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ள 800 குடும்பங்களுக்கு ஒரு கிழமைக்கான உணவுப் பொருள்களும் வழங்கப்படவுள்ளன.**

கொழும்பு சென்றிருந்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் இந்த நிவாரண உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

திருமலையைச் சேர்ந்த 6000 அகதிக்குடும்பங்களுக்கு தலா 250 ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்கள் வழங்கவும் வீதிகள் செப்பனிடுவதற்கான தார் பீப்பாக்களும் கப்பல் மூலம் கொண்டுவரவும் யாழ். ஆஸ்பத்திரியில் கட்டப்பட்டுவரும் 5 மாடிக் கட்டிடத்துக்கும் பருத்தித்துறை ஆஸ்பத்திரிக் கட்டிட வேலைகளுக்கும் தேவையான இரும்புக்கம்பிகளும் மின்கம்பங்களுக்கான இரும்பு கம்பிகளும் விரைவில் யாழ்ப்பாணம் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (மாஎ)

## "இலங்கை அரசுடன் பேச்சு நடத்தமாட்டோம்"

சென்னை, ஜுலை 26

இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பது சம்பந்தமாக இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சு வார்த்தைகளைத் தொடக்குவதற்கான ஆலோசனை எதுவும் இல்லையென்று தமிழ்ப் போராளிக் குழுக்களின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசு அப்படிப்பட்ட ஆலோசனைகளை கேட்கும் பட்சத்தில் அதைத் தெரிவிக்க தாங்கள் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி

(1 ம் பக்கம் பார்க்க)

## அரசு மன்னிப்பு வழங்கும்

கொழும்பு, சனி

"தீவிரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பானவர்களுக்கு அரசாங்கம் மன்னிப்பு வழங்கும். அவர்களும் உத்தேச மாகாணசபைத் தேர்தல்களில் பங்குபற்ற முடியும்"

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன இலங்கை ரயர் கூட்டுத்தாபனத்தின் ஜாதிகசேவா சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவு விழாவில் நேற்று உரையாற்றுகையில் தெரிவித்தார், (சிஎ)

## போராளிகள் விடுத்துள்ள கோரிக்கைகளுக்கு 'தமிழீழ விடுதலை அணி' ஆதரவு

சென்னை, ஜுலை 26

'இந்திய அரசிடம் ஈழப் போராளிகள் வலியுறுத்தியுள்ள நான்கு அம்சக் கோரிக்கைகளுக்கு 'தமிழீழ விடுதலை அணி' பொதுச் செயலாளர் திரு ஈழவேந்தன் முழு ஆதரவு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

'இந்திய அதிகாரிகள் அழைப்பின் பேரில் புதுடில்லி சென்றுள்ள ஈழப்போராளிகள் ஜெயவர்த்தனவுடன் சமரச பேச்சு வார்த்தைக்கு அடிப்படையாக நாலு அம்ச கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். தமிழர்களுக்கு தாயகம் சுயநிர்ணய உரிமை, தமிழரின் தனித்துவம், இந்திய வம்சாவழித் தமிழர் பிரச்னையும் ஈழத்தமிழர் ஏனைய பிரச்னைகளையும் இணைத்து தீர்த்தல் ஆகிய நாலு அம்சக்கோரிக்கைகளை சமரச பேச்சுவார்த்தையின் அடிப்படையாக எடுத்துக் கொள்ள ஜெயவர்த்தனவை வலியுறுத்த வேண்டும் என்று போராளிகள் இந்திய அதிகாரிகளிடம் கூறியுள்ளனர்.

இந்தகோரிக்கைகளுக்கு தமிழீழ விடுதலை அணிமுழு ஆதரவு தருகிறது. (மா-எ)

## 7 கடற்றொழிலாளர்களுடன் கடலில் தத்தளித்த இந்தியப் படகு நெடுந்தீவுக்கரை அடைந்தது

நெடுந்தீவு, சனி

இந்திய கடற்றொழிலாளர்களின் இழுவலைப்படகு ஒன்று இயந்திரக்கோளாறு காரணமாக கடலில் தத்துளித்த பின்னர் வேறொரு இயந்திரப் படகினால் நெடுந்தீவுக் கரைக்கு இழுத்துவரப்பட்டது

அப்படகில் தொழில் செய்ய வந்திருந்த ஏழு இந்தியக் கடற்றொழிலாளர்கள் தெய்வாதீனமாகக் காப்பாற்றப் பட்டனா.

இராமேஸ்வரத்தைச் சோந்த இந்தப்படகு ஆறு நாட்களாக கடலில் தத்தளித்ததாகக் கூறப்படுகின்றது. (இ-எ)

நோர்வே

நாட்டிற்கு செல்வோர்க்கு

ஓர் அரிய வாய்ப்பு!

எங்கும் இல்லாதவாறு அதிவிசேட சலுகை.
மிக குறைந்த கட்டணத்தில் விமான டிக்கட்டுகள்
ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

கமல் சேவிஸ்

பஸ் நிலைய முன்பாக
டில்கா கிறீம் கவுஸ் மேல்மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24174

விளம்பர அமைப்பு: மணிக்குரல் மேஜர்ஷண்

[C3732]

## 'மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும்' —'புளொட்' அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

"எமது போராட்டம் பலரது தியாகங்களால் இரத்தமும், வியர்வையும் சிந்தி எமது இலட்சியத்தை நோக்கிகடினமான பாதையில் வளர்க்கப்படுவதாகும். இதை உணராது செயல்படும் தனி நபர்களது செயற்பாடுகளை கண்டு அஞ்சுவதும் குழம்புவதும் தெளிவான அரசியல் நோக்கின் செயல்படாது மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும்".

'தமிழீழ விடுதலைக் கழகத்தின் தற்போதைய நிலைப்பாடு' என்ற தலைப்பில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளட்) தள நிர்வாகி கமிட்டி விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது அவ்வறிக்கை மேலும் கூறுவதாது

"தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பற்றிய அறிக்கைகள் பல செய்தி ஸ்தாபனங்களால் மிகைப்படுத்தப்பட்டும் குழப்பகரமான முறையிலும் வெளியிடப்பட்டுள்ளன.

(11ம் பக்கம் பார்க்க)

## ரயில் பிரயாணிகள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

வவுனியாவிலிருந்து கொழும்புக்குப் பிரயாணம் செய்வதற்காகச்செல்லும் பயணிகள் அங்கு காசுக்கட்டளைகளைக் கொடுத்தே டிக்கட்டுகள்பெற வேண்டியிருப்பதால் காசுக் கட்டளைகளை யாழ்ப்பாணத்திலிருந்தே எடுத்துக்கொண்டு செல்வது நல்லதென்று தெரிவிக்கப்படுகின்றது.

(11ம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாயில் கிறசரும் [16-10] இசுசு டிப்பர் லொறியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு R. பாலகிருஷ்ணன், இருபாலை றோட் கோண்டாவில். [C 3656]

9ம், 10ம், 11ம், ஆண்டு மாணவர்களுக்கான முதலாம் பகுதி சமூகக்கல்வி மாதிரி வினு விடை வெளிவந்து விட்டது. எல்லாப் புத்தகக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா 8. 50 ஆசிரியர்: செ. ஜேசுதாஸ். [C 3678]

நல்ல நிலைமையில் உள்ள (Clacio) கிளாஸ்யோ குளிர் சாதனப்பெட்டி விற்பனைக்கு உண்டு. 95, பழைய டச்வீதி, கல்வியங்காடு என்ற முகவரியில் ஞாயிற்றுக்கிழமை [27-7-86] எந்நேரமும் பார்வையிடலாம். [C 3713]

புதிய சன்சுயீ (Sansui) றேடியோ கசற்டெக், அம்பிளிபையர், இரண்டு ஸ்பீக்க (3Way 40x40 Watts) உடன் விற்பனைக்குண்டு. V. S. கந்தசாமி, பழம்றோட், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை. (C3723)

அச்சகத்திற்குரிய பேப்பர் வெட்டும் நல்ல நிலையில் உள்ள கட்டர் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சுவர்ணு 295/7, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [C 3697]

நல்ல நிலைமையில் உள்ள 1ஸ்ரீ ஒஸ்டின் A55 கார் விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமை [27-07-1986] எந்நேரத்திலும் பார்வையிடலாம். ராமநாதன், சிவராசா அவெனியூ, பலாலிவீதி, திருநெல்வேலி. [C 3712]

தென்னை பாம் [Palm] கன்றுகள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு. ரெத்தினவாசா, கருவேலடி ஒழுங்கை, [பழைய புகையிரதவீதி] கொக்குவில் கிழக்கு. [C 3673]

Singer தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, கதிரைகள், ஹோல் செற், Play Pen, Cot, சில்வர், பித்தளை பாத்திரங்கள், கிளாஸ் வகைகள், றேடியோ, T. V., Show Case, கண்ணடி மேசைகள், கட்டில் மெத்தைகள், Filter, அல்மாரி, National Blender, Volkswagen கார், மின் கேற்றல், கமரா, மின்விசிறி, நவீன தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், மாவடிச் சந்தியருகில். [C 3681]

Sisil குளிர் சாதனப்பெட்டி, Singer மின்சார, சாதாரண தையல் மெஷின், Table/Stand Fan, T. V, Floor Polisher, தேக்கு அலுமாரிகள், Electric Cooker with oven, கட்டில்கள், றேடியோ கசற்றுகள், Kenwood Chef, செற்றி, சுவர் மணிக்கூடு மற்றும்பல விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன், பிறீ மல்ரி சேவீஸ், திருநெல்வேலி வடக்கு (திருநெல்வேலி சந்திக்கும்யாழ். மருத்துவக்கல்லூரிக்குமிடையில்). [C-3705]

கூந்தலழகு மிளிர நாலு இயற்கை பொருட்களான சீயாக்காய், பச்சையரிசி, பயறு, வெந்தயம், சேர்ந்த 'சீயாக்காய் பவுடர்' மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G M. 777, K K.S. Road and 208, 1st Cross St, Jaffna T P. 22611. [C-3399]

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் (சின்னக்கடைச் சந்தி) 141, பாங்சால் வீதியில் சகலவசதிகளைக் கொண்ட 3 படுக்கையறை, பெரியகோல், விருந்தை, குசினி, 4பகுதிகளைக்கொண்ட சிறிய வீடும் அத்துடன் 3 பகுதிகளைக் கொண்ட மேல்மாடி, 2 குழிப்பல் அறை, 2 மலசல கூடங்களைக்கொண்டவீடு விற்பனைக்குண்டு. (C3717)

கோழி வளர்ப்போர் எதிர் நோக்கும் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும், வீட்டிலிருந்தவாறே வருமானமீட்டவும் வெளிவந்துள்ளது. இலகுவான கோழிவளர்ப்பு'' ஆசிரியை ஆர். அயூப். கிடைக்குமிடங்கள்: ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, சாரதா புத்தகசாலை. (C3720)

## சேவை

திரிபேஸ், சிங்கிள் பேஸ் Electrical வயரிங், மோட்டர்ம், ஜெனரேட்டர் என்பன Contractors சிறந்தமுறையில் செய்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: 20, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் [C3684[

## தேவை

எவ்வகை இனமாயினும் இறைச்சிக்குக் கோழி தேவை. கிலோ 30/-க்கு மேற்பட்ட பல விலைகளில் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Phone: 23131. [C 3640]

3 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு உடுவில், மருதனுமடம், இணுவில் சுற்றுடலில் மின்சார வசதியுடன் கூடிய சிறிய வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இல. C 3680, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 3680)

எமது காரியாலயத்தில் லிகிதராக கடமையாற்ற பெண்கள் இருவரும், கொழும்பு சென்றுவரக்கூடிய பிணைப் பணம் செலுத்தக்கூடிய ஆண் பிரதிநிதி ஒருவரும் தேவை. விபரங்களுக்கு: நிர்வாகி, சங்கர் ரவல் சேர்விஸ், 125, சிவன்கோவில் வடக்கு வீதி [வைத்தீஸ்வரா வித்தியாலய றோட்], யாழ்ப்பாணம் [C 3683]

Deep Freezers தேவை. நல்ல நிலையில் இருப்பின் மட்டும் விபரங்களையும், எதிர்பார்க்கப்படும் விலையையும் தெரிக்கவும். விளம்பரதாரர்: M, மே/பா dun ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. (A 954)

## வகுப்புகள்

T. V. பயிலுனர்க்கான புதிய வகுப்புகள் 02-08-86 ஆரம்பமாகவுள்ளன பயிலுனரின் வசதிக்காக சனி, ஞாயிறு [இரு தினங்கள்] மட்டும வகுப்புகள் நடத்தப்படும். பயில விரும்புபவர்கள் 01-8-86 முன் தொடர்புகொள்ளவும். விலாசம்: S. குணாளன், றெலி கோணர், சாவகச்சேரி. [C 3701]

## வைத்தியம்

நாட்பட்ட சகல நோய்கட்கும் விசேட சிகிச்சை அளிகப்படும். ஜெயந்தி கிளினிக், 218/5, பலாலிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C3724)

## கல்வி

G.C.E. [O/L]ல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் சித்தியெய்தாதவர்களுக்கு, ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு, ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்குக் கற்பிபபதில் 17 வருட அனுபவமுள்ள ஆசிரியரினுல் வீடுகளிற் சென்று நுணுக்கமானமுறையில்கற்பிக்கப்படும் மற்றும் 6 இலிருந்து [O/L], [A/L] சகலபாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினுல் கற்பிக்கப்படும். காலை 8 00 இற்குள் வீட்டில் சந்திக்கவும் அல்லது கடிதத் தொடர்பு கொள்ளவும் ஆறுமுகநாதன், 10, கச்சேரி ஒழுங்கை, சுண்டுக்குழி. [C 3716]

## மணப்பந்தல்

இதோ! கவலை வேண்டாம். மங்கள ஏஜென்சி 80% மங் ஏஜென்சியை நாடியவர்கள் நல்ல திருமணத்தை அடைகிறுர்கள். எம்மிடம் எல்லா இனம் மதத்திலும் வெளிநாட்டிலும் மணமக்கள் இருக்கிறுர்கள். தொடர்பு: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (C3587)

யாழ் இந்து உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த நல்லொழுக்கமுடைய 28 வயதான அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் பொறியியலாளராகக் கடமையாற்றும் பேராதனைப் பல்கலைக்கழக B sc(Engineering) பட்டதாரிக்கு அதே குலத்தைச் சேர்ந்த அழகும், நல்லொழுக்கமும் உடைய M B B S மணமகள் தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்க. விளம்பர இல. 3964, C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 3694)

வயது 32, உயரம் 5' 5''. அதி உயர் இந்து வேளாளர் குலத்தில் பிறந்த அரச நிறுவனத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தராக(T A)க் கடமை புரியும் மாத வருமானம் 2500/- உள்ள மணமகனுக்கு சம குலத்தில் பிறந்த சிவந்த அழகான நன்கு படித்த மணப் பெண் தேவை. ஆசிரியை போன்ற தொழில் பார்ப்பவர் விரும்பத் தக்கது. சகல முழு விபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். சீதனம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் விளம்பர இல. C 3654, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 3654)

தனியார் நிறுவன உரிமையாளர் வெளி நாடுகளில் பதவி வகிப்போர் சுய முயற்சியில் ஊதியம் காணும் கமநலச் செல்வர், வங்கி ஊழியர், ஆசிரியர் முதலானேரின் சாதகக் குறிப்புகள் எம்மிடம் உண்டு. 35 வயதுக்கு மேற்பட்ட தகுதிகாண் தபுதாரர் விவாகரத்துச் செய்தோர் குறிப்புகளும் எம்மால் வரவேற்கப்படும். தமிழ் வளம் சான்ற அந்தணர் கிறிஸ்தவர் முதலானேரும் தொடர்பு கொள்ளலாம். திருமதி சரோஜ் யோகநாதன், ''பிறீ'' மல்ரி சேவிஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. (யாழ் மருத்துவ பீடத்திற்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில்) (C 3706)

## சேவை

வெளிநாடு செல்லும் உத்தேசமா? அப்படியானுல் உங்களுக்குத் தேவையான பாஸ்போட், பொண்ட், விசா, ஏயர் லயின்ஸ் புக்கிங் மற்றும் பயணச்சீட்டுக்களைக் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்: ஆர். கே அன்ட் சன்ஸ், 129, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம், Telephone: 24029, 18 1/8, Mudalige Mawathe, Colombo, Telephone: 540581, (C3628)

SCIENCE CENTRE KARAYEDDY

வெளியூர் மாணவர்களுக்கான பகல் நேர துரித வினு விடை வகுப்புக்கள் [இதுவரை பூர்த்தியடைந்த பகுதிகள்.]

இரசாயனம்/பௌதிகம் விலங்கியல்/தாவரவியல் க. பொ. த. (உயர்)

87 Aug

ஆரம்பம்: 01-08-86

முடிவு: 31-08-86

விண்ணப்ப முடிவு திகதி: 31-07-86

(C 3621)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஜீவநாயகம் பொன்னம்பலம்

தோற்றம் : 05-09-1936

மறைவு : 07-08-1985

திதி : ஷஷ்டி

ஜீவ ஒளியாய் சுடர் விட்ட எங்கள் குடும்பத்தின் அன்புச் செல்வமே நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றுலும் உமது ஜீவ ஒளியானது எம்மை விட்டு என்றும் அகலாது. எமது அன்புச்செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

அம்மா, அருமை மனைவி, அருமை மகள், தங்கை, உற்றூர், உறவினர்.

செல்லத்துரை வீதி, உரும்பராய் தெற்கு. உரும்பராய். C 3402

## 45-ம் நாள் நினைவு அஞ்சலி



தம்பிப்பிள்ளை கனகசபை

மலர்வு; 29-03-1929

உதிர்வு: 12-06-1986

எங்கள் அன்புத்தெய்வமே! நின் உயிரைப் பறித்து எம்மை ஆழ்ந்த துயரில் ஆழ்த்தி விட்டீர்களே, உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


சட்டம்பியார் (தம்பி), மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரகள்.

நீலியம்பனை, மல்லாகம்.

C 3702

## நினைவஞ்சலி

3-ம் ஆண்டு



ந. நவரத்தினராசா (தொழில் நுட்ப அலுவலர், கண்டி)

மலர்வு : 5-6-53

உதிர்வு : 27-7-83

2-ம் ஆண்டு



செல்வி ந. ருக்மணி

மலர்வு : 18-1-61

உதிர்வு : 28-7-84

**7-ம் மாதம்** திருமதி க. இலட்சுமிப்பிள்ளை

மலர்வு : 3-5-12 — உதிர்வு : 12-12-85

அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்கும்
உறைவிடமாய் இன்புற்று
எம்மோடு இணைந்திருந்து 83-ன்
இருள்படிந்த ஜூலையில் இன்னுயிரை
நீத்தவனே; தனித்திருக்க மாட்டாமலோ
தங்கையையும் அழைத்துச் சென்ருய்
உடனிருந்து உதவுதற்கோ
அம்மம்மாவையும் அழைத்தீர்.

கண்ணீரில் கரைந்துருகும்

அன்புப் பெற்றோரும், உடன் பிறப்புக்களும்.

முள்ளியான்பளை. C 3715

# 'கறுப்பு ஜூலை'யின் அந்த ஆறு நாட்கள்!

1983-ம் ஆண்டுஜூலை மாதம் 25 ம் திகதியும் அதனை யடுத்து வந்த சில நாட்களும் ஒரு தனி மனிதனின் நெஞ்சிலல்ல, அனைத்துத் தமிழ் மக்களினது நெஞ்சிலுமே மாற்றமுடியாத நினைவுகளையும் வடுக்களையும் ஏற்படுத்தின.

இலங்கையில் தமிழாகப் பிறந்துவிட்ட காரணத்திற்காக நாம் அரும் பாடுபட்டு உழைத்த சொத்துக்களைக் காப்பாற்ற வழியற்று உரிமையற்று போனதை எவ்வாறு அவர்கள் மறப்பர்?

ஜூலை 24 இல் பொரளையில் சிறியளவில் ஆரம்பித்த இந்த வன்செயல்கள் மறுதினம் கொழும்பு மாநகரம் முழுவதும் பரவின. தொடர்ந்து நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழர்க்கெதிராகவும் வன்செயல் பிரயோகிக்கப்பட்டன.

தமிழர்களுக்கெதிரான இந்த வன்செயல்களைக்கட்டுப்படுத்தவென 25ம் திகதியன்று ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டது. ஆயினும் அதன் பின்னரே வன்செயல்கள் உக்கிரமடைந்தன எனக் கூறவேண்டும்.

## கறுப்பு வெள்ளி

ஜூலை 29 ம் திகதி வெள்ளிக்கிழமை.........

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய மறு நாள்.

அன்றுதான் தலைநகரில் 'கொட்டியா' புகுந்தது. முதலில் பயத்தினால் தலை தெறிக்க ஓடிய குண்டர்கள் பின்னர் வீதியில், வீடுகளில் அகப்பட்ட அப்பாவித் தமிழர்களைக் கொடூரமாக வெட்டியும் உயிருடன் எரித்தும் தமது வீரத்தைக் காட்டினர் ஆதாரமற்ற விஷமத்தனமான இந்தக் 'கொட்டியா, செய்தியினால் பல நூற்றுக் கணக்கான அப்பாவித் தமிழர் உயிரிழக்க நேர்ந்தது!

இவ்வாறு தமிழர்க்கெதிரான வன்செயல்கள் தொடர்ந்து நடைபெற்றுவந்த வேளையில் அரசியற்திறம் செயலிழந்திருந்தது. சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியவர்கள் தமது கடமையைச் செய்யவில்லை. அல்லது செய்ய அனுமதிக்கப்படவில்லை. மாறாக கலவரங்கள் முன் கூட்டியே திட்டமிடப் பட்டவை என்பது தமிழர் வீடுகள் நேர்த்தியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதிலிருந்து புலனாகியது.

## சிறைப் படுகொலைகள்

இந்த நாட்களில் நடைபெற்ற சம்பவம் மிகவும் மோசமானதும், உலகைத் திடுக்கிட வைத்ததுமான சம்பவம் வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகள் மிகவும் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதாகும்.

இலங்கையிலேயே மிகவும் அதிகளவு பாதுகாப்புள்ளது என வர்ணிக்கப்பட்ட வெலிக்கடைச் சிறையில் தமிழருக்குப் பாதுகாப்பில்லாமல் போனது எங்ஙனம்? இத்தாலிய விமானமொன்றைக் கடத்திய குற்றத்திற்காக வெலிக்கடைச் சிறையில் காவலில் இருந்த சேபால ஏகநாயக்காவின் 'தலைமையிலான' சிங்களக் கைதிகளின் கூட்டமொன்றே இந் நரவேட்டையை நடத்தியதாம்!

ஜூலை25 இல் 35 தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்ட போதே எஞ்சிய கைதிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவர்கள் அப்புறப் படுத்தப் பட்டிருக்க வேண்டும் ஆனால் 27ம் திகதியும் 17 கைதிகள் கொல்லப்பட்டனர்!

ஒருசில மணித்தியாலங்களிலேயே அநாதைகளாகி விட்ட தமிழ் மக்கள் அரசு தாராள மனத்துடன் ஆரம்பித்த அகதி முகாம்களை நோக்கிப் படையெடுத்தனர்

## ஜனாதிபதி உரை

தமக்கிழைக்கப்பட்ட அநீதிகளுக்கு அரசிடமிருந்து ஆறுதலை எதிர்பார்த்த தமிழ் மக்களை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை.

இந் நாடு சிங்களவர்க்கே உரியது போலவும் தமிழர்க்கு அவர்கள் செய்த அநீதிகள் நியபாயமானவை போலவும் அமைந்திருந்தது அவரது பேச்சு.

கலவரங்களுக்குப்பொறுப்பானவர்களைத் தண்டிக்க அரசு முன் வரவில்லை மாறாக மக்களை குழப்பும் வகையில் அறிக்கை மேல் அறிக்கையாக விட்டுக் கொண்டிருந்தது.

தமிழர்க்கெதிரான வன்செயல்களைத் தூண்டி விட்டு இந் நாட்டைச் சீர் குலைக்கும் இடதுசாரி நாடு ஒன்று இவற்றுக்குப் பின்னணியாக இருந்தது என ஒரு அறிக்கை, ஆங்கிலப்பத்திரிகையொன்று; இச் 'சதித்திட்டம்' பற்றிய 'உண்மைத் தகவல்களை' பிரசுரித்தது. கலவரங்களுக்குக் காரணமானவை என மூன்று கட்சிகள் தடை செய்யப்பட்டு அவற்றின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

அரசின் இன்னொரு அறிக்கையானது, நாட்டைச் சீர்குலைக்கு முகமாக தீட்டப்பட்ட சதித் திட்டம் ஒன்றை அரசாங்கம் கண்டு பிடித்துள்ளது எனக் கூறியது இத் திட்டத்தின்படி முதலில் தமிழரும் பின்னர் முஸ்லீம்களும் தொடர்ந்து கிறிஸ்தவரும் தாக்கப்பட விருந்தனராம்.

● செந்தில்

இதில் ஆச்சரியப்படத்தக்க விஜயம் என்ன வென்றால் இவ்வறிக்கை வெளியிடப்பட்டு சில நாட்களில் கொழும்பிலுள்ள சில முஸ்லிம் ஸ்தாபனங்கள், வீடுகளுக்கு அச்சுறுத்தல் கடிதங்கள் அனுப்பப் பட்டன!

வெளிநாட்டு பத்திரிகை நிறுவனங்கள், நாட்டு நிலைமையை மிகைப்படுத்தியுள்ளன எனக் கூறப்பட்டது 'இதுதான் உண்மை' எனப் புத்தகங்கள் அச்சடித்து வினியோகிக்கப்பட்டன.

எப்படியிருப்பினும் மூன்றாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இக் கலவரங்களும் ஜனாதிபதியின் உரையும் தமிழரிடையே, குறிப்பாக வடக்கை அறிந்திராத தமிழரிடையே ஒரு கேள்வியை எழுப்பியது.

ஸ்ரீலங்காவில் தமக்கு சம உரிமையுடன் வாழ உரிமை உண்டா?

எப்படியாயினும் மூன்று தசாப்தங்களாக இழுபறிப்பட்டு வந்த தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கான அருமையானவொரு சந்தர்ப்பத்தை இந்த ஜூலை கலவரங்கள் உருவாக்கித் தந்தன.

ஆயினும் என்ன? பிரச்னை இன்னமும் தீர்ந்த பாடில்லை. பேச்சுவார்த்தைகள் நின்று நின்று நடைபெறுகின்றன; நடைபெறும் தலைநகர்கள் மாறுகின்றன; பங்கு பெறும் தரப்புகள் மாறுகின்றன, தமிழர் கொலைகளும் தொடருகின்றன.

## செஞ்சிலுவையே! உந்தன் சேவையைத்தான் கோருகிறோம்

வீட்டுக்கு மேல் வேட்டு! வீதியிலும் தான் வேட்டு!
பாட்டுக்குத் தான் கடலில் போனாலும் வாள்வெட்டு!
மாட்டைப்போல் எம்முடைய மக்களைப் போய்க்கொல்லுகிறார்
சாட்டை கொடுப்பாய் என்றுநாம் கோரவில்லை
நஞ்சிலுவைப் பாதை அந்தோ நாளும் இங்கே நீளுவதால்
செஞ்சிலுவையே உந்தன் சேவையைத்தான் கோருகிறோம்,

கோன்பிடித்துக் கொண்டிருக்கும் கொள்கைக் கருப்படையால்
மீன் பிடித்துத் தின்பவரை மீன்பிடித்துத் தின்கிறதே!
'ஏன் பிடித்தாய்' என்றவரை இடித்துரைக்கச் சொல்லவில்லை
ஊன் துடித்தே அந்த உதிரம் வடிகையிலே
பஞ்சுடனே—நெஞ்சப் பரிவுடனே ஓடிவரும்
செஞ்சிலுவையே உந்தன் சேவையைத்தான் கோருகிறோம்.

எங்கள் கடலில் குருதி கலந்திடலால்...
செங்கடல்கள் எங்கும் சடலம் மிதந்திடலால்...
எங்கந்தச் செஞ்சிலுவை என்றுதான் ஏங்குகிறோம்!

உம்பர்வான் ஊர்திசுட... உயிர் ஊசலாடுதென
அம்புலன்சு வண்டியிலே அவசரமாய் ஏற்றிவர...
'பாஸ் வேண்டும்' என்று மறிக்கின்ற வீரருக்குப்
'பேஷ்' போடும் ஆட்சி, மருந்தெமக்குப் போடாது
'தப்பு இது' என்று கூறும் தருமத்தைக் கேட்கவில்லை
குற்றுயிராய்ப் போனவர்க்கு உற்றுழிவந்தே உதவும்
செஞ்சிலுவையே உந்தன் சேவையைத்தான் வேண்டுகிறோம்

களங்குறித்துப் போரிடுங்கால் களத்திலே வீழ்ந்தவர்க்கு
உளங்குளிர உலகெங்கும் உதவுகிற செஞ்சிலுவை
களங்குறியாவிட்டாலும் களத்திலே வீழ்ந்தவர்க்கு
உளங்குளிர உதவிடுதல் வேண்டுமென்றே வேண்டுகிறோம்.

—சத்தியசீலன்.

ஓ...........................

## அந்த இருண்ட நாட்கள்!

மூன்றாண்டுகள்
கடந்து விட்டன
ஆனால்...அந்த
இருண்ட நாட்களின்
இரைச்சல் இன்னும்
எம் காதுகளின்
செவிப்பறைகளில்
சாவீட்டுப் பறையாய்
ஒலிக்கின்றன!
அந்த ஆடித்திங்கள்
இன்னமும் எம்மை
அச்சுறுத்திய படிதான்
இருக்கிறது!
அன்று.........
எம்மனிதர்கள் பலர்மீது
புத்த தர்மம் பேசுவோரால்
கட்டவிழ்த்து விடப்பட்ட
வெறி
காட்டாறு போல்
தொடர்ந்து பிரவகிக்கின்
றது!
இந்தப்.........
புனிதர்களின் செயல்கண்டு
புத்தரே இன்று
கண்ணீர் வடிக்கின்றார்!

— வட்டூர் சிவானந்தன்

'பெரி'ஸ்கோப் —

## மருந்தும் மாயமும்!

அன்று ஐம்பத்துமூன்று அரசியல்கைதிகளை மானங்கெட்ட முறையில் காட்டுமிராண்டித்தனமாகப் பலியெடுத்த அதே வெலிக்கடைச் சிறைக்கூடம்—

அதே மாதம், அதே நாளில் -

அரசியல் கைதிகளாகி அங்கு உண்ணாவிரதமிருந்த தமிழ் இளைஞர்களில் இருவர் சிறைக்காவலர்களால் கொடூரமான முறையில் நையப்புடைக்கப்பட்டு உயிருக்காபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்களாம்.

துயரம்தோய்ந்த அந்த ''83 ஜூலையினை நினைவு கூர இங்குதான் ஹர்த்தாலும் கடையடைப்பும் நடைபெறுகின்றதென்று பார்த்தால், வெலிக்கடைச் சிறைக்காவலர்களுக்கும் அந்தக் கறுப்பு ஜூலையைச் 'சாதனைகள்' செய்து நினைவுகூருகின்ற துடிப்பு இருப்பது போலத் தெரிகின்றது!

''நாம் அழுதுமுடிந்தகற்கு நன்றி சொல்லவோ நீ அழுதாய்?'' என அந்த 53 பேர்களினதும் ஆவிகள் இன்று உயிருக்காக மன்றாடும் இந்த இருவரையும் பார்த்துக்கேட்கின்ற வேளையில், 'அன்றும், இன்றும், ஏன் என்றுமே இப்படித்தான் செய்வோம்'' என்ற தோரணையில் வெலிக்கடைத் தர்பார் தொடர்ந்து வீறுநடை போடுகின்றது!

வியத்நாமில் 'மைலாய்' கிராமத்து மக்கள் ஆண் பெண், குஞ்சுகுருமன் என்ற பேதமின்றி வெறிபிடித்த அமெரிக்கத் துருப்புக்களால் 'கூண்டோடு கைலாசம், ஏற்றப்பட்டபோது நாகரிகஉலகம் முழுவதும் திகைத்து நடுங்கியது!

லெபனானில் 'ஷதீலா', 'ஸப்ரா' முகாம்களில் அடைக்கலம் புகுந்திருந்த அப்பாவிப் பாலஸ்தீனியர்களை இஸ்ரேலியத் துருப்புக்கள் ஒட்டுமொத்தமாக ஒழித்துக்கட்டியபோது உலகமே அதிர்ந்தது!

ஆனால், இந்த வெலிக்கடைகள் தொடர்ந்தும் 'கொலைக்கடை'களாக மாறிவருவதைத் தட்டிக்கேட்கவோ அல்லது தடுத்து நிறுத்தவோ ஒருநாதி இல்லையா?

இந்தக் கசாப்புக்கடை ராஜாங்கம் இன்னும் எத்தனைகாலம் தொடரப்போகின்றது?

ஆடிக்கொருக்கால், ஆவணிக்கொருக்கால் அமளிதுமளிப்பட்டதுபோய், நாளொரு ஜூலையும் பொழுதொரு ஹர்த்தாலுமாய் நாம்வாழுகின்ற அவலம் எடபோது நீங்கப்போகிறது?

'ஒவ்வொரு வன்செயலுக்கும் பின்னால் நிவர்த்திக்கப்படாத ஒரு குறைபாடு மறைந்து கிடக்கிறது' (Behind every act of violence there is an unremedied grievance) என காலஞ்சென்ற ஆயர் விக்கிரமசிங்ஹ தமிழ் விடுதலைப் போராளிகளின் நடத்தையை வியாக்கினஞ் செய்த ஒரு தருணத்தில் குறிப்பிட்டார். போராளிகளைப் பொறுத்தளவில் அவர்களது செயல்பாட்டினுக்கு நியாயம் கற்பிக்க நியாயசிந்தை கொண்ட எவராலும் முடியும்.

ஆனால்,

அப்பாவி மக்களைக் கொன்றுகுவிக்கும் அரச துருப்புக்களின் 'நாட்டாண்மை'யை எப்படி நியாயப்படுத்துவது? அவர்கள் எதற்காக, யாருக்காக, யாருக்கு எதிராகப்போராடுகிறார்கள்? எந்த இழந்த உரிமையைப் பெறுவதற்கு? எந்த இழந்த மண்ணை மீட்பதற்கு? இதை அர்த்தயற்ற அதிசூரத்தனம் என்று சொல்லாமல் வேறென்னென்பது? தொட்டுப்பார்க்கத்தான் அவர்களிடம்ஒரு மனச்சாட்சி இல்லையென்றாலும் தட்டிக்கேட்க இங்கு எவரும் இல்லையா?

பூட்டானுக்கு வந்தாலும் 'நான் மாட்டேன்' என்றொரு அசட்டுப்பிடிவாதம்! திம்புவுக்குப் போனாலும் வம்புதான் மிஞ்சும் என்றொரு விரக்தி! அங்குள்ளோர் சென்னைக்கும் டில்லிக்குமாய்ச் செட்டைகட்டிப் பறப்பதும், இங்குள்ளோர் ஏதோ சாக்குப்போக்கில் குட்டை குழப்புவதும் இன்னும் எத்தனைநாளைக்கு நடக்கப்போகிறது?

83 ஜூலையின் ரணங்கள் ஆறுதநிலையில், புதிய ரணங்கள் பச்சைப்புண்களாய் சீழ் வடிக்கின்றன. இவற்றுக்கு மருந்துமாயம் இல்லையா?

மாயங்களை விடுத்து மருந்தை மட்டும் தேடினால் அடுத்த ஆடியாவது விடியும்!

A Boon to Diabetic Patients

DIABETIC BROWN BREAD
Now available

தவிட்டுப் பாண் இப்பொழுது விற்பனையாகின்றது.

ALSO YOUR FAVOURITE CURRENT LOAF.

Stockists:

CITY MEDICALS. (சிற்றி மெடிக்கல்ஸ்) Hospital Road, Jaffna.

BHARATH TRADES, (பாரத் டிரேட்ஸ்) Hospital Road, Jaffna. (Adjoining Eric-Rajapakse Opticians)

Made By:
PEDRUPILLAI'S PREMIER BAKERY,
73, Main Street, Jaffna.
T. P: 22644. Estd: 1865

AWAIT ANOTHER FIRST BY PREMIER'S — PUFF PASTRIES AND SAVOURIES

(C-3722)

# பண்டைத் தமிழர் நீதி நிர்வாகம்

● ம. பொ. செல்வரத்தினம்

பல நூற்றாண்டுகளாகத் திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாகவும் வழிகாட்டும் இடங்களாகவும், கல்வித் தாபனங்களாகவும், ஆய்வு கூடங்களாகவும் திகழ்ந்தன. பல்வேறு சபைகளும் கோயில்களில் கூடித் தீர்மானங்கள் எடுத்தும், விசாரணைகளை நடாத்தியும், கரும மாற்றியதைப் பண்டைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இன்னும் எமது முன்னோர்களது பழக்க வழக்கம், ஒழுக்கம், நாகரீகம், பண்பாடு பற்றிய தகவல்களையும் தந்துதவியுள்ளன. ஆலமரம் போன்ற பாரிய மரத்து நிழலில் ஊரார் கூடிப் பொது விஷயங்களைப் பேசித் தீர்ப்பது, கிராம வாழ்க்கையில் சர்வ சாதாரண நிகழ்ச்சியாக இருந்தது. ஊர் மக்கள் கூடிச் செயலாற்றிய மன்றங்கள் பிற்காலத்துக் கிராம சபைகளுக்கு மூலங்களாக விளங்கின.

ஊர் மூதூர் என்றும் அந்தணர்கள் குடியிருப்புகள் சதுர்வேதி மங்கலம் என்றும், வணிகர்கள் வாழ்ந்த இடம் நவமென்றும் அழைக்கப்பட்டன. அந்தணர்களை மகா சபையும், வணிகர்களை நகரம் என்ற சபையும், ஊரை ஊர்ச்சபையும் நிர்வகித்தன இவை சேர்ந்த இணைபபு பெருங்குறி என வழங்கப்பட்டு இக் குறியில் பல குழுக்கள் இருந்ததும், இவை வாரியம் எனப்பெயர் கொண்டதும் தெளிவாக உள்ளன தோட்டங்களைத் தோட்டவாரியமும், நீர் நிலைகளை ஏரி வாரியமும் நாணயத்தை நாணய வாரியமும் நிர்வகித்தன. குழுக்களிலுள்ள ஊர்ப் பெருமக்களை வாரியப் பெருமக்கள் என்றும் அமைத்தனர். குடவோலை முறையினால் தெரிவுகள் நடைபெற்றன. சிலப்பதிகாரத்தில் 'அரசு கோல் கோடினும் அறங்கூற வையம்' என்றும், கல்வெட்டுகளில் 'தர்ம சாசனம்' என்

பரிபாலன அதிகாரத்தைப் பரவலாக்கும்
விஷயம் இன்று முன்னணிக்கு வந்துள்ளது.
நீதி நிர்வாகத்துறை அதிகாரம் பண்டைத்
தமிழர் காலத்தில் பரவலாகப்
பாலிக்கப்பட்டுவந்த பாங்கில் ஆதர்ஸமாகக்
கொள்ளவேண்டிய அம்சங்கள் பலவுள்ளன.

## கல்வெட்டுகளும் காவியங்களும் காட்டும் உண்மை

பண்டைய ஊர்கள் ஊர்ச் சபைகளால் நிர்வகிக்கப்பட்டு தன்னாட்சி புரிந்தன. இவை வரலாற்றுக் காலத்திலிருந்து வழக்கிலிருந்ததை கல்வெட்டுகள், பட்டயங்கள் செப்பேடுகள் ஆதிய புலப்படுத்துகின்றன, மன்றம் பொதியில் முதலியன பற்றப் பண்டைக் காவியங்கள் எடுத்துரைக்கின்றன. பல்வகை ஊர்கள் ஊர்ச் சபைகளால் நிர்வகிக்கப்பட்டு வந்ததையும்தொடர்ந்து கூறுகின்றன பல சாக்கியங்களைச்சேர்ந்த மக்கள் கொண்டுறும் வியந்தேத்தப்பட்ட அவையங்கூடித் தீர்ப்புகள் வழங்கியமை இச் சபைகளின் தொன்மைக்குச்சான்றாக விளங்குகின்றன.

இதே போன்று ஊர்ச்சபைகளில் நியாய வாரியமும் இருந்தது நீதிவழங்கும் அவைகள் மன்றம், அறக்களம் என வழங்கி ஊர்களிலும், நகரங்களிலும் செயலாறறின, ஊர்களில் ஏற்படும் தகராறுகளையும், சிறு குற்றங்களையும் ஊர் மன்றமே விசாரித்து தண்டனை கொடுத்தது. கொலை, களவு ஊர்ப்பிரச்சினைகளை ஊர்ப் பெருமக்கள் கேட்டு நீதி வழங்கினர்.

## மனுநீதி மகிமை

பண்டைத் தமிழ் மக்களது நீதிமுறை மிக உன்னதமானதென்பதை காவியங்கள் கூறுகின்றன. சேக்கிழார், இளங்கோவடிகள் ஆகியோரால் புகழப்பட்ட மனுநீதி கண்ட சோழன், ஆராய்சிமணி நிறுவி நீதிவழங்கியது யாவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது வழக்குப்பற்றிய அறிவித்தலை 'குறை' என்றும், இருசாராரையும் கேட்டறிந்து நீதிவழங்குதலை 'முறை' என்றும் வழங்கப்பட்டது. சாட்சிகளை விசாரித்ததும், சான்றுகளை ஆராய்ந்ததும் பெரியபுராணத்து தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரமூர்த்திநாயனாரது வழக்கிலிருந்து நன்கு புலப்படுகிறது.

'ஆட்சியிலா வணத்திலன்றி
மற்றயலார் தங்கள்
காட்சியின் மூன்றிலொன்று
காட்டுவாயென்ன முன்னே
மூட்சியிற் கிழித்த வோலை
படியோலை மூலவோலை
மாட்சியிற் காட்டவைத்தே
னென்றனன் மாயைவல்லான்,

என்று மிகத்தெளிவாக இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வாயால் உறுதிசெய்யும் சத்தியத்தை சத்தியப்பிரமாணஞ் செய்தல் என்றும், வழக்கில் சாட்சி கூறுதலை கரி என்றும், பொய்ச்சாட்சி கூறியவர்கள் அல்லது பொய்ச்சான்றுகாட்டியவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்றும் புலனாகின்றது. பொய்கூறியவரைத் தண்டிக்கப் பூம்புகாரில் பூதம் ஒன்று இருந்ததெனப் பண்டைக் காவியங்கள் கூறுகின்றன.

## வழக்குகளும் வகைகளும்

உரிமைபற்றிய வழக்குகள், குற்றம்பற்றிய வழக்குகள் என வகைப்படுத்தப்பட்டுக் குற்றம் பற்றிய வழக்குகளில் கடுந்தண்டனை வழங்கப்பட்டது. குற்றவியலில் அரசியின் காற்சிலம்பைக் களவாடியதற்காக கோவலன் மீது பழி சுமத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதும் கூறப்பட்டுள்ளது இன்று போல், அன்றும் காணித் தகராறு, கிணற்றுத்தகராறு, பணத்தகராறு இன்னும் பல தகராறுகள் மக்களைப் பீடித்திருந்தன இணக்கசபைகளும், பெரியோர்களது சபைகளும் அன்று பணிபுரிந்தன. நீதி கேட்டு நின்ற அக்காலமக்கள் நீதிவழங்குதலில் முதிர்ந்த வயதும், ஆழ்ந்த அறிவும், நல்லொழுக்கமும் இன்றியமையாதவை என்று வலியுறுத்தப்பட்டது.

சோழ இளவரசன் கரிகாலனது இளமையை உற்று நோக்கி வழக்குரைக்க வந்தவர்கள் தயங்கினார்கள் என்றும் அதனை உணர்ந்த இளவரசன் மாறுவேடம் பூண்டு முதியோனாகத் தோன்றி நீதி வழங்கினான் என்று காவியங்கள் கூறும். திருவள்ளுவர் கூறியது போன்று 'சமன் செய்து சீர்தூக்கும் கோல், போல், நடுநிலை தவறாது நீதி வழங்கியதும், ஒரு முறையோடு மாத்திரமன்றி ஏழு முறை விசாரித்து சிந்தித்துத் தெளிந்து நீதிவழங்கியதும் வரலாறு தெளிவுபடுத்துகிறதன்றோ.

அம்மா! நீ தந்த பானம் அதி சுவை! அதிசுவை!!
அது என்னம்மா?
அது! தான் தேசிய கூழ்!
எங்கே! வாருங்களேன் வருகை தந்து பாருங்களேன்!
இயற்கையின் இன்பச் சோலைக்கு.
அழைக்கின்றது யாழ் பீச் இன்! எமது தேசிய கூழுக்கு.
ஞாயிறுதோறும் வாடிக்கையாளர்கள் அதிகரிக்கின்றார்கள்
சுவைத்தவர்கள் பாராட்டுகின்றார்கள்!
சுவைக்காதவர்கள் சுவைக்கத் துடிக்கின்றார்கள்!!
தாமதம் உங்கள் எதிரி!
அது! இது!! என்று அலட்டிக்கொள்ளாமல் நாம் தருவது சுத்தமான தித்திக்கும் சுடச்சுட தேசியகூழ்.

★ காலை 11-30 மணிமுதல் பிற்பகல் 2-30 மணிவரை.

யாழ் பீச் இன்
(Yarl Beach Inn)
139, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
(கூழுக்கு முந்துங்கள் படைக்கு பிந்துங்கள்)

விளம்பர அமைப்பு : ஜோ. எகட்டன்
செனித் அட்வடைசிங் அன்ட் மார்கட்டிங் சிஸ்டமஸ்
யாழ்நகர்.
(A 962)

## ருக்கிங்

ஈழ அகதிகள் இந்தியா செல்கையில்
இருந்ததா அங்கிந்த 'ருக்கிங்'
வாழத்தவித்து புதிய வேலைக்கு
வந்த இளைஞர்க்குண்டா 'ருக்கிங்'
ஏழை மணப்பெண் மாமல்வீடு
ஏறும்போது நடந்ததா 'ருக்கிங்'
தாழப்பறந்து குண்டு வீசும்
தருணத்தில் தேவையா இந்த 'ருக்கிங்'
—யோகி

திருமணம்

அன்புடையீர்,

நிகழும் அக்ஷய வருடம் ஆடிமாதம் 10ம் நாள் (26-07-86) சனிக்கிழமை மாலை 3 மணியளவில்

திருநிறை செல்வன் அ. அலோசியஸ் அவர்கட்கும்
எனது புத்திரி திருவளர் செல்வி க. புவனேஸ்வரி அவர்கட்கும்

திருமணவிழா திருவருள் நலத்தால் அவுஸ்திரேலியா சிட்னிநகர பிறண்டன் தேவாலயத்தில் இனிதே நிறைவேறியதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
திருமதி தெய்வநாயகி கதிரவேலு,
6/3, கன்னதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
[C-3719]

65 வருடகாலமாக
மக்கள் மனதில் நிலைத்த பெயர்
தோலகட்டி தயாரிப்புகள்

இவ்விளவேனிற் காலத்தில் தோலகட்டி தயாரிப்புகள் நிச்சயம் உங்கள் தாகத்தை பூர்த்திசெய்யும். தோலகட்டி தயாரிப்புகள் தங்குதடையின்றி எங்கும் கிடைக்கும்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற
வரணிமிசன் விற்பனை நிலையம்,
145, நவீன சந்தை,
யாழ்நகர்.

யாழ்நகரில் பின்வரும் இடங்களிலும் தோலகட்டி தயாரிப்புகளை பெற்றுக்கொள்ளலாம்.

* ரட்ணம் பார்மசி and குறோசரி
* மாகோ ஸ்டோர்ஸ்
* R G. ஸ்டோர்ஸ்
* ஸ்ரீ ராமகிருஷ்ணாஸ்
* ஸ்ரீ சாயி ஸ்டோர்ஸ்
* சிட்டி மெடிக்கல்ஸ்
* S. K. M. மெடிக்கல்ஸ்
* பொம்பே ஜாயி சுவீட்ஸ்
* ஸ்ரீரஞ்சனி ஸ்டோர்ஸ்
* யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
* கற்பகம்
* விற்பனை இலாகா (மக்கள் கடை)
* சங்கரப்பிள்ளை அன்ட் பிரதர்ஸ்
* சண்முகநாதன் அன்ட் கோ
* கந்தையாப்பிள்ளை and சன்ஸ்
* ராஜா கோப்பிரேஷன்
* குணரட்ணம் ஸ்டோர்ஸ்
* யோகு டிரேடிங்
* நாகதர்ஜினி
* சுப்பிரமணியம் அன்ட் கோ
* உமா ஸ்ரோர்ஸ்
* ராஜி ஸ்டோர்ஸ்
* அருணாசலம்பிள்ளை அன்ட் கோ
* சுப்பையா அன்ட் கோ (மதுபான விற்பனைச்சாலை)
* முகமதலி அப்பதலலி
* டவர் கூல் பார்
* யாழ். டிரேடிங்
* அனிதா (கச்சேரியடி)
* கண்ணன் ஸ்டோர்ஸ்
* பெமலி காடின்ஸ் [சின்னக்கடை]
* சத்தியா ஸ்டோர்ஸ் ,,
* சிவசக்தி ஸ்டோர்ஸ் ,,
* கமலா ஸ்டோர்ஸ்
* பெமலி சொப் [நாவலர் வீதி]
* மாணிக்கம் ஸ்ரோர்ஸ் [சின்னக்கடை]

தொடரும்

★ எமது நெல்லிரச லேபலில் ஒரு மணிக்கூட்டு கோபுரம் உண்டு அதில் மணி 6-20 தைக் காட்டுகின்றது. உன்னிப்பாகக் கவனித்து வாங்கவும்.

விபரங்களுக்கு:
ஜோ. எகட்டன், செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ், யாழ்நகர்.
செபமாலை தாசர் சபை, தோலகட்டி, வசாவிளான்.

ஆதரவிற்கு நன்றி! [A 961]

# ● கிளிநொச்சியின் துயரம்!

**'அன்னக்கொடி' பறக்கவிட்ட அந்த விவசாய மன்னர்கள் இன்று அகதிகளாய் அநாதைகளாய் மாற்றார் கைகளை எதிர்பார்த்து நிற்கும் பரிதாபத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர்.**

# வெறிச்சோடிக் கிடக்கும் வடக்கின் விவசாயக் களஞ்சியம்!

மக்களின் பசிப்பிணியைப் போக்க ஏர்பிடித்த கிளிநொச்சி விவசாயிகள் இன்று தங்களது பசிப்பிணியைப் போக்க மாற்றார் கைகளை எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

அமைதியான அந்த அதிகாலைவேளை பறவைகளின் ரீங்கார ஓசை கேட்டு உறக்கத்தில் ஆழ்ந்திருந்த மக்கள் துயில்கலைந்தும் கலையாத நிலையில் அங்கும் இங்கும் புரளுகின்றனர்.

இரவு வேளைகளில் இடம்பெறும் இராணுவ அநர்த்தங்களால் கொட்டக்கொட்ட விழித்திருந்து விடிவதற்குச் சற்று முன்னதாகத்தான் நித்திரையில் மூழ்கிப்போனவர்கள் இவர்கள்.

திடீரென பயங்கர ஓசைகளுடன் குண்டுச்சத்தங்களும் ஷெல், பீரங்கிச் சத்தங்களும் காதைப்பிளக்கவே அமைதி இழந்த மக்கள் அங்கும் இங்கும் ஓடுகின்றனர். உடுத்த உடுப்புடன் கால்போன போக்கில் ஓடுகின்றனர்!

மனைவியைவிட்டு கணவன் ஓடுகிறார். கணவன் ஒருபுறம் மனைவி ஒருபுறம் ஓடுகின்றனர். பிள்ளைகள் சிதறி ஓடுகின்றனர்.

படுத்த பாயைச் சுற்றாது ஓடியோரும், வீட்டைப் பூட்டாது ஓடியோரும், ஓடினால் குண்டுபட்டுவிடுமே என அஞ்சி முகங்குப்புறப்படுத்துக் கிடந்தோரும்.. ...

ஆம், கடந்த ஆனி மாதம் 4ம் திகதி வடக்கின் பிரதான விவசாயப் பிரதேசமாகவும் ஈழத்தின் புதியதோர் தலைநகரமாகவும் விளங்கிய கிளிநொச்சி நகரம் பெரும் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது; அமைதி இழந்து தவித்தது.

இந்தநிலை இப்போது மட்டும் தான் ஏற்பட்டதில்லை. தினம் தினம் கிளிநொச்சி மக்கள் சந்தித்துப் பழக்கப்பட்ட நிலை தான்.

சாதி, மத பேதமற்ற அனைத்துப் பிரதேச தமிழ் மக்களுக்கும் சொந்தமாகிய சமதர்ம பூமி கிளிநொச்சி. இங்குள்ள பொலிஸ் நிலையம் இராணுவ-பொலிஸ் கூட்டுமுகாமாக என்று மாறியதோ அன்றிலிருந்து இன்றுவரை கிளிநொச்சி பல அநர்த்தங்களை-அழிவுகளைச் சந்தித்து வருகிறது.

*1956, 1977, 1983*ம் ஆண்டுகளில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களின்போது சொந்தப் பூமியையும் உடமைகளையும் கைவிட்டு அகதிகளாக வந்த பல ஆயிரக்கணக்கான மக்களை அரவணைத்து அவர்களை வாழவைத்த கிளிநொச்சி மக்கள் இன்று தமது வசிப்பிடங்களை, தொழில் நிலையங்களைவிட்டு உடமைகளைக் கைவிட்ட நிலையில் அநாதைகளாகியுள்ளனர்; அகதிகளாகியுள்ளனர்.

மக்களின் பசிப்பிணியைப் போக்க ஏர்பிடித்த கிளிநொச்சி விவசாயிகள் இன்று தங்களது பசிப்பிணியைப் போக்க மாற்றார் கைகளை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்!

கல்வியில் முன்னேற்றம் இல்லை என்ற காரணத்தைக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கிளிநொச்சி தனி மாவட்டத்தில் பத்தாயிரம் மாணவர் இராணுவ கெடுபிடி நடவடிக்கைகளால் தமது கல்வியை இழந்துள்ளனர். இம்மாணவர்கள் கல்வி கற்று வந்த பிரதான பாடசாலைகள் எல்லாம் மாதக்கணக்காக மூடப்பட்டுள்ளன.

இவற்றில் சில பாடசாலைகள் விமானக் குண்டுத் தாக்குதலுக்கும் ஷெல்த்தாக்குதலுக்கும் உள்ளாகியிருக்கின்றன.

இலங்கையில் உள்ள சந்தைகளில் பிரபல்யம் மிக்கதாய் விளங்கிய கிளிநொச்சி பொதுச் சந்தையும் அதைஅண்டியிருந்த நூற்றுக்கணக்கான கடைக் கட்டிடங்களும் படையினரால் இராணுவ முகாம் விஸ்தரிப்புக்கென இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மக்களின், குறிப்பாக, விவசாயிகளின் தேவைகளையும் வடபிரதேச விவசாயிகளின் தேவைகளையும் நிறைவு செய்துவந்த கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம், பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் உட்பட தபால், அலுவலகம், உரக் கூட்டுத்தாபனம், பட்டின சபை அலுவலகம், நகரமண்டபம் முதலானவை. இன்று இராணுவத் துருப்புக்களின் வாசஸ்தலங்களாகிவிட்டன.

கே. வி. கே.
திருலோகமூர்த்தி

கடந்த ஆனி 4ம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட நிலவரங்களைத் தொடர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட வர்த்தகர்களும், அங்காடி வியாபாரிகளும், சிப்பந்திகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களது வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டே கிடக்கின்றன. பல வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளைபோயும் உள்ளன.

இதேவேளை ஆகாயக் குண்டு வீச்சு, ஹெலிகொப்டர் தாக்குதல் முதலான காரணங்களாலும் இராணுவ நடைபவனித் தாக்குதல், முகாமில் இருந்து தொடுக்கப்படும் பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதலாலும் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாய முயற்சிகளை நம்பி ஜீவனம் நடத்தி வந்த ஆயிரக்கணக்கான கிளிநொச்சி வாழ் மலையகக்குடும்பங்கள் தொழில் வாய்ப்பை இழந்து கஷ்டநிலைக்குள்ளாகிவருக்கின்றன. இந்த மலையகத் தொழிலாளர்வாழ்வு வெறும் சூனியமாகவே இருக்கிறது.

கிளிநொச்சி நகரமும், அடுத்துள்ள பரவிப்பாஞ்சான், கணேசபுரம், திருநகர், கனகபுரம், ஆனந்தபுரம், இரத்தினபுரம், கரடிப்போக்கு.உதயநகர் ஜெயந்திநகர், பரந்தன் முதலானபகுதிகளில் வசித்துவந்த சுமார் 50 ஆயிரம் மக்கள் உடைமைகளை வீடு வாசல்களை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வசித்து வந்த பல வீடுகள் விமானக்குண்டு வீச்சால் சேதமாக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகரத்தைத் தழுவி இருப்பதுதான் திருநகர். இங்குமட்டும் பத்தாயிரம் மக்கள் வாழுகிறார்கள். மிகவும் முன்னேறிய பகுதியாக இது நகரப்பகுதியுடன் ஒப்பிடக்கூடிய இடம்.

இத்திருநகர் வாசிகள் தான் கூடுதலாகப் பாதிப்படைந்

(8 ம் பக்கம் பார்க்க)

சென்ற வாரத் தொடர்ச்சி

# ● ராணி தலைமையில் ஒரு ராஜாங்கம்!

# காசு தருகின்ற தேன்கூடு-அதைக் கட்டுவதென்றால் பெரும்பாடு

தேனீக்கள் அதிகாலையில் எழுகின்றன. பூக்களின் மேற்பரப்பில் இருக்கும் தேனை அவை உறிஞ்சிவிட்டுச் சென்றுவிடுகின்றன.

தேன்சிட்டுக்கள் என்று ஒரு பறவை இனம் உண்டு இப்பறவை உருவத்தில் மிகச் சிறியது சிட்டுப் பறவையிலும் சிறியது அது பூவிலிருந்து தேனை எடுத்துக்கொண்டு செல்லும் போது பூவின் மேற்பரப்பில் தேனே இருக்காது. இறைவன் அதற்கு ஒருவரம் கொடுத்திருக்கிறான். அதன் வாயிலே ஒரு கொடுக்கு உண்டு. அந்தக் கொடுக்கின் மூலம், அதுபூவின் தண்டிலே உள்ள தேனை உறிஞ்சும்.

மூன்றாவது ரகம் வண்ணத்துப் பூச்சி வண்ணத்துப் பூச்சி இருக்கிறதே, அது போகும் நேரத்தில் ஆழமான தண்டு உள்ள பூக்களில் மட்டும் தான் தேன் இருக்கும்.

வண்ணத்துப்பூச்சிக்கு நூல் போல நீளமான துப்பி உண்டு. தேனை வண்ணத்துப் பூச்சி தனது தும்பியால் துழாவி எடுத்துக் குடிக்கும். கப்பியால் நாம் கிணற்றில் தண்ணீர் எடுப்பதுபோல இந்த நிகழ்ச்சி இருக்கும்.

**ராணிக்கு 'அரச கூழ்'!**

ராணிக்கு உணவூட்டுவதற்கு ஒரு 'மேற்றன்' நியமிக்கப்படுவார் என முன்னர் குறிப்பிட்டிருந்தோம். இனிமேல் ராணி உண்ணும் உணவைப் பார்ப்போம்.

தேனீ வளர்ப்போர் ராணிக்கு எதுவிதமான உணவும் போடத்தேவையில்லை. தேன் கூட்டில் உள்ள தொழிலாளர்களே அதனைக் கொடுப்பார்கள்!

மகரர்தப் பொடிகளாலும், காயகல்ப மூலிகைகளாலும் 'அரச கூழ்' என ஒரு உணவு தயார் பண்ணப்படும். இந்தக் கூழ் மேற்றனால் ஒரு நாளைக்கு 100 தடவை ராணிக்குக் கொடுக்கப்படும். ராணியே முட்டையிடும் செயலைச் செய்வதால் அதன் வயிற்றைத் தடவிக் கொண்டேயிருக்கத் தேன் கூட்டில் ஒரு குழு உண்டு.

இது மட்டுமா?

ராணி எழுந்து நடக்கும் போது சகல தேனீக்களும் எழுந்து இடம்விடும். அங்கு ஒழுக்கக் கட்டுப்பாடு அப்படி. ராணியின் அந்தரங்க நாயகர் வானத்தில்வைத்துராணியுடன் ஒருநாள் தாம்பத்தியம் நடாத்தியதுடன் அவர்பாடு சரி, அவருக்கு அதன்பின்பு மரியாதை இல்லை. விரும்பினால் இருக்கலாம் இல்லையென்றால் 'விவாகரத்துச்'செய்து விட்டுப் பறந்து போகலாம். அவர் ராணிக்குக் கிட்டப்போவதையோ, தொட்டுப் பார்ப்பதையோ தொழிலாளித் தேனீக்கள் அனுமதிக்கமாட்டா.

**காற்றாடி வசதி**

ராணியின் இந்த சௌகரியங்களுடன் அவளுக்கும், கூட்டுக்கும் காற்றோட்ட வசதி செய்வதற்கென்று தேனீக்கூட்டம் ஒன்று உண்டு. அவை கூட்டில் தற்சமயம் புதிதாகப் பிறந்தவைகள்! தமது முதற்கட்டமாக அவை ராணித் தேனீக்கு முதுகு சொறிதல், காற்று வீசுதல் முதலான வேலைகளில் ஈடுபடும். சொர்க்கத்தில்கூட ராணியொருத்திக்கு இப்படி வசதிகள் இருக்குமோஎன எண்ணத் தோன்றுகிறது.

காற்று வீசும் இந்த இளைய தேனீக்களுக்கு இவ்வேலை முயற்சியால் செட்டைகள் பலம்பெற்று அதன்பின்பு தேன்பைகள் உண்டாகும். இந்த நிலையே பருவம் அடையும் நிலை. தேன்கூடு வளர்க்கும் ஆசையுடையோர் இந்தப் படிமுறை வளர்ச்சியை அவதானித்து வைத்திருக்க வேண்டும்.

**'கொலனி' கலைதல்**

ஒரு தேன்கூட்டில் ராணிக்கு வயதானவுடன் ஆயிரக்கணக்கான தேனீக்கள் அதன் தலைமையில் பிரிந்து சென்று வேறு கிளைகளில் அமர்ந்துகொள்ளும். இதனைக் 'கொலனி பிரிதல்' என அழைப்பார்கள். இவ்வாறு ஆயிரக்கணக்கான தேனீக்கள் கிளையில் தொங்கும்போது அங்கிருந்து நாலைந்து தேனீக்கள் ஒற்றர்படையாகப் பிரிந்து செல்லும். தாம் எங்கு தனியே சென்று கூடு கட்டலாம், பிரிந்து வாழலாம் எனப் பொந்து பார்ப்பதே இவற்றின் நோக்கம். இவைகள் சரியான இடத்தைத் தெரிந்துகொண்டபின் தமது கூட்டத்தினரை அங்கு அழைத்துச் செல்லும்! இந்த நேரத்தில் சரியான உபகரணங்களின் உதவியுடன் பிரிந்து செல்லும் தேனீக்களைத் தேனீ வளர்ப்போர் பிடித்துக்கொள்வர், பின்பு அவைகளை வேறொரு கூட்டிலிட்டு வளர்ப்பர்.

தேனீ வளர்க்கும் நோக்கம் உங்களுக்கு இருந்தால் இந்தக் கிளைகளில் (கொலனி) ஒன்றையோ அல்லது பலவற்றையோ நீங்கள் தேன்வளர்ப்பாளரிடம் கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள். வளர்க்கும் பெட்டிகள், மற்றும் காலநிலை, சூழ்நிலை என்பனபற்றி அடுத்த வாரத்தில் உங்களுக்கு விளக்கம் தருவோம்!

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்
இணுவையூர் முருகேசம்பிள்ளை

## விசித்திரமான உண்மைகள்

● தேனீக்கள் சந்தேகக் குணம் அற்றவை. அதிகம் தேன் எடுப்பது நீயா நானா என அது அடிபடுவது இல்லை.

● பஞ்சம் வந்த காலத்தில் பிணக்குப் படாமல் அவை தேனைப் பகிர்ந்து குடிக்கும்!

● ஆண் தேனீக்களுக்குக் கொடுக்குகள் இல்லை. தொழிலாளித் தேனீக்களுக்கு மாத்திரம் அது உண்டு.

● தேன்கூடு தாக்கப்பட்டால் போராடுவது தொழிலாளித் தேனீக்களே.

● மற்றவர்கட்குப் பாரமாக இருக்கத் தேனீக்கள் விரும்புவதில்லை. அந்தநிலை வரின் தன்னையே மாய்க்கும். மாரடைப்பு வந்துசாகும் நிலை வந்தால் தன்கூட்டத்தைக் கூப்பிட்டு தன்பையில் இருக்கும் தேனை எடுத்துக் கொண்டு போகும்படி தன் கூட்டத்திற்குச் சொல்லும்! அத்துடன் அதன் வாழ்வு முடியும்.

● அரைக்கிலோ தேன் சேகரிக்கத் தேனீக்கள் 37 ஆயிரம் சுற்றுலாக்கள் செய்தல்வேண்டும்.

● தேனீக்கள் ஒருமுறைதான் கடிக்கும் அதன் பின்பு அதன் கொடுக்கு உடைந்து போகும்.

● தேனீக்களின் இறகு நிமிடத்துக்கு 420 தரம் அடிக்கும்.

# நீங்கள் திராட்சை உற்பத்தியாளரா? இதோ சில யோசனைகள்

எமது கணிப்பின்படி யாழ். மாவட்டத்தில் 276 கெக்ரரில் திராட்சை செய்கை பண்ணப்படுகின்றது. தற்போது திராட்சை உற்பத்தியாளர்கள் தங்கள் திராட்சைச் கொடிகளிலிருந்து போதியளவு உற்பத்தியைப் பெற முடியாமல் இருக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. இவற்றை நிவர்த்தி செய்தால் போதியளவு உற்பத்தியைப் பெறலாம்.

**நடுகைத் துண்டங்கள் தெரிவு செய்தல்**

நடுகைத் துண்டங்கள் கட்டாயம் வீரியமான நன்கு முதிர்ந்த கொடிகளிலிருந்து மட்டுமே பெறப்படவேண்டும் கொடிகள் முக்கியமாக தூள் பூஞ்சண நோய், வைரஸ் நோய் இல்லாதவையாக இருக்கவேண்டும். துண்டங்கள் 6—8 அங்குல நீளமாகவும் 4 கணுக்கள் கொண்டவையாக இருப்பது விரும்பத்தக்கது.

**நடுகைத் தூரம்:**

விவசாய ஆராய்ச்சியாளர்கள் வரிகட்கிடையே 18 அடியும் வரியில் 12 அடியையும் சிபார்சு செய்திருக்கிறார்கள். நடுகைத் தூரத்தை மேலும் குறைத்தால் கொடிகட்குப் போதியளவு சூரியவெளிச்சம் இல்லாமல் இவைக்குத் தூள் பூஞ்சண நோய் ஏற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும். ஒரு நிலைபத்துக்கு ஒரு கொடி மட்டுமே நடவும்.

**கத்தரிக்கும் நேரம்:**

யாழ். மாவட்டத்தில் சில செய்கையாளர்கள் பழங்களை விரைவில் பெறுவதற்காக 9 மாதத்தில் கத்தரித்தல் செய்கிறார்கள். ஆராய்ச்சியாளரின் கூற்றுப்படி 1½-2 வருடத்திலேயே கத்தரித்தல் செய்வது விரும்பத்தக்கது. அத்தருணம் தான் கொடிகள் போதியளவு வீரியத்தைப் பெற்றிருக்கும், 9 மாதத்தில் கத்தரிப்புச் செய்வதால் கொடிகள் வீரியத்தை இழந்தும் அதன் ஆயுளும் குறைய இடமுண்டு. கத்தரித்தல் வருடத்தில் 2 முறை மட்டுமே செய்யவேண்டும். முதலாவது டிசம்பர் மாதப்பெரு மழை முடிந்த பின்பும், இரண்டாவது மே மாதக் கடைசியிலோ அல்லது ஜூன் முதல் வாரத்தில் செய்யவும். டிசம்பர் மாதக் கத்தரிப்பு பழங்களை ஏப்ரலில் பெறலாம். இக் கத்தரிப்பை மேலும் தாமதித்தால் இதனால் பெறும் பழங்கள் வெடிப்பு நிறைந்ததாகவும் பங்கஸ் நோய்த் தாக்கம் ஏற்பட இடமுண்டு, கத்தரித்தலைச் செப்டம்பரிலோ நவம்பரிலோ செய்தாலும் இப்பழங்கள் பெரும்போகக் கடைசி மழையினால் சேதப்பட இடமுண்டு. மே மாதக்கடைசியிலோ ஜூன் முதல் வாரத்திலோ செய்யும் கத்தரிப்பால் பெறும் பழங்கள் டிசம்பர் மாதக் கத்தரிப்பால் பெறும் பழத்திலும் பார்க்கச் சிறந்ததாகும். இவை இனிப்புக்கூடியதாகவும் நோய், நொடி இல்லாமலும் இருக்கும். எப்படியானாலும் ஜூன் மாதத்தில் இருந்து மேலும் பிந்தினால் அப்பழங்கள் பெரும்போக முதல் மழையினால் செப்டம்பர் நடுப்பகுதியில் பாதிப்படைய இடமுண்டு.

பழங்களைக் கூடிய விலைக்கு விற்பதற்காகச் சில உற்பத்தியாளர்கள் காலம் தப்பிய கத்தரித்தலை Off season Pruning) செய்கின்றார்கள். அப்படிச் செய்தாலும் அவர்கள் ஒரு கொடிக்கு வருடத்தில் இரு முறைக்கு மேல் கத்தரித்தல் செய்தால் அக்கொடிக்குப் போதிய பாதிப்பைக் கொடுக்கும். அளவுக்கதிகமாகப் பழங்களைத் தொடர்ந்து பெற்று வந்தால் சில காலத்தின்பின் பழ அறுவடை முற்றாக இல்லாமல் போகலாம். சேகரிக்கப்பட்ட உணவு போதியளவு கொடியில் இருந்தால் தான் பழம் அதிகமாகக் கிடைக்கும். கத்தரித்தலைக் கொடிகள் இயற்கையாகத் துளிர்க்க முன்பு செய்யவேண்டும்.

**பசளை இடல்:**

அடிக்கட்டுப் பசளையாக 12-8-34 என். பி. கே கலவையில் கொடி ஒன்றுக்கு 450 கிராம்வீதம் நடுகையின்போது குழியில் இட்டு மண்ணுடன் நன்கு கலந்து விடவும். இக் கலவையைப் பின்வரும் முறையில் தயாரிக்கவும்.

யூறியா 117 கிராம் சுப்பர் பொஸ்பேற் 81 கிராம் மியுறியேற் ஒப் பொட்டாஸ் 252 கிராம் மேலும் மேற்கட்டுப் பசளையாக இக்கலவையை நாட்டி 6 மாதங்களின்பின் கொடியொன்றுக்கு 450 கிராம் இடவும்.

**கத்தரித்தபின் கவனிப்பு:**

தேவையில்லாத இலைகள், தண்டுகள் சேகரிக்கப்பட்டு, தோட்டத்திலிருந்து அகற்றி எரிக்கவும். தூள் பூஞ்சண நோயிலிருந்து புதுத் துளிரையும் பூக்களையும் காப்பாற்றுவதற்குப் பின்வரும் பங்கஸ் நாசினியில் ஒன்றைக் கொப்புகளுக்கு விசிறவும்.

(a) போடோ கலவை பிரமாணம் 4-4-50

(b) றிடோமில் MZ 1 அவுன்சை 3கலன் நீரில் கலந்து விசிறவும்.

(c) கப்ரன் 1 அவுன்சை 3 கலன் நீரில் கலந்து விசிறவும். இரண்டுமுறை றிடோமில் விசிறும்போது ஒருமுறை மாற்றி கப்ரான் விசிறுவது நல்லது. கத்தரித்தபின்பு நீர்ப்பாசனம் செய்யலாம். ஆனால் கொடியை வாடவிடவேண்டாம்.

**கத்தரித்தபின் பசளை இடல்:**

மேற்கூறிய கலவையில் கொடிக்கு 900 கிராம் வீதம் இட்டு தொடர்ந்து ஒவ்வொரு கத்தரித்தலின்போதும் 225 கிராம் வீதம் அதிகரித்து ஆகக் கூடியது கொடியொன்றுக்கு 2700 கிராம்வரை இடவும்.

பொதுவாக திராட்சைக் கொடியை தூள் பூஞ்சண நோய் பெரிதும் பாதிக்கும். இவை இலைகள் பூக்கள் பழங்களை தாக்கி விளைவை வெகுவாகப்பாதிக்கும், நாம் முன்னெச்சரிக்கையாக இலைகளில் முதல் அறிகுறியாக சிறிய மஞ்சள் நிறபுள்ளிகள் தோன்றிய பின்பு போடோ கலவையோ, றிடோமில் Z கப்ரன் போன்றவற்றுள் ஒன்றை முன்கூறிய பிரமாணத்தில் விசிறவும். மேலும் தற்போது பங்கஸ்நாசினியில் போடோ கலவையை நாமே தயாரிக்கலாம். இது இலாபமும் ஆகும். பின்வரும் பிரமாணங்களை நாமே செய்து நிலைமைக்கேற்றபடி பாவிக்கலாம்.

[1] கத்தரித்த பின்பு 4:4:50 பிரமாணம்.

[2] பழைய இலைகளுக்கு 5: 5 50 பிரமாணம்.

[3] இளம் துளிருக்கு 3:3:50 பிரமாணம்.

[4] பூக்களுக்கும் காய்களுக்கும் 1: 1: 50 பிரமாணம்.

**போடோ கலவை செய்யும் முறை**

பிரமாணம் 4—4—50

தேவையான பொருட்கள்: [1] 4 இரு, சுண்ணும்பு, [2] 4 இரு. கொப்பர் சல்பேற் அல்லது துருசு [3] 50 கலன் நீர். நீறுக்கப்பட்ட சிப்பி சுண்ணும்புக்கு [Quick Lime] நீரை கலக்கும்போது களி சுண்ணும்பு [Slaked Lime] வரும் இதில் 4 இருத்தலை எடுத்து வேறாக 50 கலன் நீர் கொள்ளக்கூடிய பிளாஸ்ரிக் வாளியிலோ, பிப்பாவிலோ 4 கலன் நீரை ஊற்றி நன்றாக கரைக்கவும். பின்பு வேறாக 4 இரு. மாவாக்கிய துருசை சீலையில் பொட்டணியாகக் கட்டி 4 கலன் நீரில் மண்பானையிலோ மரத்தினால் செய்யப்பட்ட பாத்திரத்திலோ நன்றாகக் கரைக்கவும்.

பின்புஏற்கனவே கரைக்கப்பட்ட துருசு நீரை படிப்படியாக சுண்ணும்புநீர் இருக்கும் பிப்பாவுக்குள் ஊற்றவும். அத்தருணம் கலவையை நன்றாககலக்கவும். பின்பு மிகுதி 42 கலன் நீரை ஊற்றிக் கலக்கவும். கலவையை வடித்த பின்பே பாவிக்கவும். போடோ கலவையை எப்பொழுதும் புதிதாக செய்து பாவிக்கவும். ஏற்கனவே செய்யப்பட்ட கலவையைப் பல நாட்களின் பின்பு பாவித்தால் அதன் சக்தி குறைய இடமுண்டு. தவிர்க்க முடியாத காரணங்களுக்காக அதே நாளிலே பாவிக்கமுடியாமல் போனால் 50 கலன் கலவைக்கு அறுபது கிராம் சீனியைக் கலந்து ஓரளவுக்கு அதன் சக்தி குறைவதைத் தடுக்கலாம். உங்களின் தோட்டத்தின் அளவுக்கேற்ப போடோ கலவையைத் தயாரிக்கவும். மேலும் தூள் பூஞ்சண நோயைக் கட்டுப்படுத்தினால் யாழ். உற்பத்தியாளரின் முக்கியமான பிரச்னையான பழங்கள் முற்றும்போது குலையிலிருந்து விழுவதைத் தடுக்கலாம். யாழ். திராட்சை உற்பத்தியாளர்கள் தங்களின் மேலதிகமான பிரச்னைகளைத் தீர்ப்பதற்காகத் திருநெல்வேலியில் இருக்கும் விரிவாக்க உத்தியோகத்தரையும் ஆராய்ச்சியாளரையும் நாடும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள்.


**சி. ஜோன்**
விவசாய உத்தியோகத்தர்
திருநெல்வேலி


---

## ஆரம்பக் கல்வி

# நாவலர் முயற்சிகளும் கல்வி மறுமலர்ச்சியும்

(முன் தொடர்ச்சி)

1865-ஆம் ஆண்டில், இலங்கைச் சட்டசபையில், கல்வி தொடர்பான பிரேரணையொன்று அப்போதைய தமிழ் உறுப்பினர் திரு. முத்துக் குமாரசுவாமி அவர்களால் முன்மொழியப்பட்டது. இதன் விளைவாக கல்வித்துறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. நாட்டு மக்கள் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி மலிவான நிலையில் அளிக்கப்படவேண்டும் என்ற கருத்தும் அப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டது. இதன் பயனாகக் கல்வி நிலையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென மோர்கன் குழு நியமிக்கப்பட்டது. 1867-இல் இக்குழுவினரின் விதப்புரையில் ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம், அரச நிதியுதவி, பொதுசனக் கல்வித் திணைக்களம் அமைத்தல், கல்வி மேற்பார்வை, ஆரம்பக்கல்விப் பாடவிதானம், ஆசிரிய பயிற்சி என்பன தொடர்பான குறிப்புக்கள் இடம்பெற்றிருந்தன. இவற்றினால் சுயமொழிக் கல்வியளிக்கும் முழுப்பொறுப்பையும் அரசு ஏற்றது. சமயக் குழுவினரின் பொறுப்பிலிருந்த கல்வி அரசாங்கத்தின் பொறுப்பாகியது.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ்மரபு வழிக் கல்வி மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. திண்ணைகளிலும். சைவக் கோயில்களிலும் நடைபெற்றுவந்த இத்தகைய கல்விப் போதனைகளை ஊக்குவிப்பவர்களும் இல்லாதிருந்தனர். ஆசிரியர்களும் எல்லோரும் தாம் கற்றவற்றைச் சொல்லிக்கொடுக்க உடன்படாதிருந்தனர். சாதி, சமூகக் (ம)லக் கட்டுப்பாடுகள் கல்வியைப் பாதித்தன. அன்றைய தமிழ்க் கல்வி நிலையினை ''ஆறுமுகநாவலர் சரித்திரம்'' என்னும் நூலில் அதன் ஆசிரியர் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''இங்கிலீசு அரசு வந்தபின்னரும் அநேக தமிழ்ப் பண்டிதர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள்.. . இவருட் சிலர் தாங் கற்றதைத் தம்பிள்ளைக்குத் தானும் சொல்விக் கொடுக்க மாட்டார்கள். சிலர் பிறரிடத்தே ஏடுகளை வாங்கித் தாம் பிரதிசெய்து கொண்டு பாட ஏட்டை இயன்றளவு பிழைபடுத்திவிட்டுக் கொடுப்பார்கள். ஒரு வித்துவான் தாம் கற்குங் காலத்தில் எழுதிய சில நூற் குறிப்புக்களை மரணிக்குங் காலத்தில் தமக்கு முன்னே கொண்டுவந்து சுட்டுப்போடுதல் வேண்டுமென்று சொல்லிச் சுடுவித்து, அதன்பின்னரே தம் உயிர் போகப்பெற்றார்.'' இத்தகைய மனப்பாங்கு, மரபு வழிக் கல்வியின் வீழ்ச்சிக்கு மேலும் வழிசெய்தது. மேலும் ஆங்கிலம் கற்று உயர்ந்தோரின் நிலையைக் கண்ட ஏனையோர் தம்பிள்ளைகளையும் ஆங்கிலக் கல்விபெற அனுப்பி அவர்களின் சமூக நிலையை உயர்த்தவேண்டுமென்று உந்தப்பட்டார்களே தவிர, சைவத்தமிழ் மரபுக் கல்வியைப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்று எண்ணினர் அல்லர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில், யாழ்ப்பாணத்தில் சைவ, தமிழ் மரபுகளையும் பாரம்பரியங்களையும் மறுமலர்ச்சியடையச்செய்ய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எடுத்த முயற்சிகளில், கல்வி மறுமலர்ச்சியும் முக்கிய இடம்பெற்றது. ஆரம்பக் கல்வி புகட்டுவதற்கான பாடசாலைகள் பல நிறுவப்பட்டன. கிறீத்தவ சமயத்தைப் பரப்புவதற்கும், மேல்நாட்டுக் கலாச்சாரத்தைப் புகுத்துவதற்கும் பாடசாலைகள் பயன்படுத்தப்பட்டுவரும் பாதிரிமார்களின் உத்திகளை அவதானித்த நாவலர், அதே உத்திகளைக் கையாண்டு தமிழ் மரபுக் கல்வியையும், சைவசமய மரபுகளையும் பேணிப்பாதுகாக்க முயன்றார். அத்தோடு கல்வி ஆத்மீக வளர்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் இணைந்த கருவியாக இருக்க வேண்டும் என்ற கருத்தையும் கொண்டிருந்தார். 1888ல் சைவபரிபாலன சபையும் தொடர்ந்து இந்துக் கல்லூரிச் சபையும் தோன்றி, நாவலர் வழியில் கல்விப்பணியாற்றின. சேர் பொன். இராமநாதன் இதற்குப் பெரும் உந்துசக்தியாக விளங்கினார். ஆரம்பக் கல்வி வளர்ச்சியில் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பங்கு, இருபதாம் நூற்றுண்டின் முன்னரைக் காலத்தில் மிக மகத்தானது. கிராமங்கள் தோறும் ஆரம்பப் பாடசாலைகளை நிறுவி ஆரம்பக் கல்வி விருத்திக்குப் பங்களிப்புச் செய்த சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் முகாமையாளரும். செயலாளருமாக விளங்கிய திரு. சு இராசரத்தினம் அவர்களின் கல்விப்பணி தமிழ் மக்களால் நினைவுகொள்ளற்பாலது.

இருபதாம் நூற்றுண்டின் தொடக்க காலம், தேசிய உணர்வு எழுச்சிக்காலமாகும். மரபுகள், தேசியமொழி, நாட்டின் சமயங்கள், பண்பாடுகள் என்பன மறுமலர்ச்சியடைய வேண்டும் எனச் சிந்தித்துச் செயலாற்றப்பட்டகாலம். கல்வியிலும் இவ்வுணர்வுகள் பிரதிபலித்தன. நாட்டில் விடுதலையுணர்வும் மேலோங்கி நின்றது. ஆங்கிலக் கல்வியால் அதிக நன்மைகளைப் பெற்றவர்களே தேசிய உணர்ச்சியை ஊட்டும் இயக்கத்தின் கர்த்தாக்களாகவும் விளங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது, சேர் பொன். இராமநாதன். சேர் பொன். அருணசலம், திரு. ஏ கனகரத்தினம் போன்ற தமிழ்த் தலைவர்கள் தமிழர் கல்வி விருத்தியில் பெரும் ஆர்வம் காட்டினர். சட்டசபையில் இவர்கள் கல்வி பற்றி ஆற்றிய உரைகள் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தின.

ஆங்கிலேயர் காலத்தில் கல்வி முறையானது சமூகத்தில் இரண்டு பிரிவினர்களை உருவாக்கியது. ஆங்கிலக் கல்வி பெற்று உயர்ந்கவர்கள் ஒருபிரிவினர். சுதேச மொழிக் கல்வி கற்றவர்களும், மற்றையோர்களும் மறுபிரிவினர். இவர்களுள் முன்னையோர் சமூகத்தில் உயர்ந்த வர்க்கத்தினராகக் கணிக்கப்பட்டனர். ஏட்டுக் கல்வியே வழங்கப்பட்டது. ஆசிரியரும் பாடநூல்கள், கரும்பலகையும் கற்பித்தல் முறையின் சின்னங்களாகும். இத்கைய பாடசாலைக் கல்வி பொதுமக்களை ஒதுக்கிவிட்டு மேன்மக்களை இனங்காண்பதை அடித்தளமாகக் கொண்டு விளங்கியது. வர்க்கஞ் சார்ந்த இக்கல்விமுறையும், நோக்கங்களும், பாடவிதானமும், பரீட்சைகளும் செல்வாக்கும் தொடர்ந்தும் ஏதோவகையில் இன்றும் எம்மிடையே நிலவிவருகின்றன.

இலங்கையில், ஆங்கிலக் கல்வி முறையானது உயர் வர்க்கத்தில் சேருவதற்கு சமூக அசைவை, நிகழ்த்தும் சாதனமாகவே பயன்படுத்தப்பட்டது. தேசியத் தன்மையற்ற இக்கல்வியால் தேசியப் பிரச்சினைகள் உருவாக்கப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)


**கு. சோமசுந்தரம்**
(பிரதம கல்வி அதிகாரி)

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

✶ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

சாரதாவின் கணவனான கணநாதனை அந்த சந்தர்ப்பத்தில் யாருமே எதிர்பார்க்கவில்லை. ஊர்ப்புதினங்களை கதைத்துக்கொண்டு இருந்த அவர்களுக்கு, கணநாதனின் வருகை சஞ்சலத்தைக்கொடுத்தது.

கணவனுடன் கோபித்துக்கொண்டு வீடு வந்திருந்த சாரதாவுக்குகூட அவனது வருகை மருட்சியைத்தான் கொடுத்தது.

நிறை வெறியில் நின்றவாறு கண்டபடி பேசிக்கொண்டிருந்த தனது மருமகனை சமாதானம் செய்ய தங்கலட்சுமி எவ்வளவோ முயன்றாள். ஆனால் முடியவில்லை.

''எங்கே? அந்த தேவடியாள்'' என அவன் சத்தம் போட்டுக்கொண்டு விறாந்தையில் நின்றவாறு தடுமாறினான்.

''தம்பி... தம்பி...'' என பழையபடி தங்கலட்சுமி சொல்லிக் கொண்டிருந்தாள்.

## 19

''எங்கே அவன்? யாரடா? அவன். அந்த டியூசன் மாஸ்டர் அவனுக்கும் உவளுக்கும் என்ன கதை உனக்கு என்ன இருக்கிற புருஷன் காணுதோ? மோசக்காரி— மாய்மாலக்காரி—வாடி வெளியாலே. உனக்கு என்னடி அந்த டியூசன் மாஸ்டரோடை இனிப்பு. அவன் என்ன... பாடம் டியூசன் கொடுக்கிறானே அல்லது......'' என கணநாதன் மேலும் சத்தம் போட்டான்.

''தம்பி அப்படி ஒன்றும் இல்லைத்தம்பி. நாங்கள் கண்டபடி ஆட்களை இஞ்சை விடுகிறதில்லை'' என தங்கலட்சுமி பதிலுக்கு சொன்னாள்.

கணநாதன் அந்த வெறியிலேயும் நன்றாக சிரித்தான்...

''எனக்கே சொல்லுறியள் கண்டபடி ஆட்களை இஞ்சை விடுகிறதில்லை என்று. நான் எப்பிடி இந்த வீட்டுக்கை வந்தனான் என்று எனக்கு தெரியும். ஒருநாள் பார்த்து கதைத்ததோடை உங்கடை பெட்டையோடை வீட்டுக்கை இருந்து கதைக்கிறதுக்கு விட்டனீர்கள் தானே. வசமாய் நல்ல இடத்துப்பெடியன் வந்திருக்கிறான் எப்படியும் மடக்கிப்போடவேண்டும் என்று என்னை ஒருமாதிரி மடக்கி உங்கடை பெட்டையை எனக்குக் கட்டியடிச்சுப் போட்டீங்கள். ஆனால் இப்ப அவள் இஞ்சை இருந்துகொண்டு கூத்தடிக்கிறாள்'' என அவன் பேசிக்கொண்டு போனான்.

''தம்பி பிள்ளையை தவறாக நினைக்காதேயும். அவளுக்கு எந்த நேரமும் உம்முடைய நினைவுதான். ஏதோ கோபத்தில உம்மை விட்டிட்டு வந்திட்டாள். இப்ப நீர் கூப்பிட்டால் உடனே உம்மோடை வருவள். பிள்ளையை பிழையாய் நினைக்காதேயும். நீர் இப்படி வந்திரும்'' என மீண்டும் தங்கலட்சுமி சொன்னாள்.

''எல்லாருமாக சேர்ந்து நடிக்காதேங்கோ. என்க்கு எல்லாரையும் தெரியும். பாலுக்கும் காவல்— பூனைக்கும் தோழனாக இருக்கிற ஆட்கள் தான் நீங்கள்'' என பழையபடி தனது வசை புராணத்தை பாட ஆரம்பித்தான் கணநாதன்.

தங்கலட்சுமிக்கு இப்போது கொஞ்சம் கோபம் வந்தது. முதலில் மருமகனை ஒருமாதிரி சமாளித்து அனுப்ப நினைத்தாள் ஆனால் கணநாதன் எந்தவிதமான சமாதானத்தையும் ஏற்க மறுப்பதாலும் அதோடு தன்னையும் பேசத்தொடங்கியதாலும் ஏற்பட்ட கோபம் மெல்ல மெல்ல வளர ஆரம்பித்தது. ஆனாலும் அதை முதலில் வெளிக்காட்டவில்லை.

''எங்கே அவள் நேர்மையானவள் என்றால் வெளியே வரட்டும் பார்ப்பம். ஏன் ஒளித்திருக்கிறாள், எடியே... தேவடியாள் வெளியால வாடி... போட்ட நாடகமும் காணும்''

''தம்பி... தம்பி... சத்தம் போடாதேயும்... அவளுக்கு சுகமில்லை. அதால அவள் படுத்திருக்கிறாள்''

''ஓகோ சுகமில்லையோ இப்ப நான் வரேக்க நின்றவள் அதற்கிடையில சுகமில்லாமல் வந்திட்டுதே. தாயும் மகளுமாக சேர்ந்து நடிக்கிறியன்''

தங்கலட்சுமி தனது கோபத்தை இப்போது வெளிக்காட்டினாள்.

''இஞ்சை யாரும் நடிக்கேல்லை குடிச்சுப் போட்டு வந்து சும்மா... கத்த வேண்டாம்...''

''ஓ மாப்பிள்ளைக்கு கொடுக்கவேண்டிய மரியாதைதான் கொடுக்கிறியள். உங்களை சும்மா விடமாட்டன். தெரியாது என்னைப் பற்றி''

''நல்லாய் தெரியும். உன்னையும் தெரியும் உன்ரை கொப்பனையும் தெரியும். மரியாதையாய் இருந்து கதைக்கிறதென்றால் இருந்து கதையும், இல்லாட்டி போட்டு பிறகுவாரும். பிள்ளைக்கு சுகமில்லை''

''என்னைக் கலைச்சுப் போட்டு அந்த டியூசன் மாஸ்டரை மாப்பிள்ளையாக்கலாம் என்று பாக்கிறியளே? அதுதான் சரிவராது நான் விடமாட்டன். அவன் அந்த டியூசன் மாஸ்டர் இஞ்சை வந்தால் இந்த வீட்டில ஒரு கொலை விழும். ஓ... எனக்கு துரோகம் செய்யிற எவனையும் நான் நிம்மதியாக இருக்கவிடமாட்டன்'' என கணநாதன் பேசினான்.

கதவுக்கு பின்னால் நின்ற சாரதாவுக்கு முகத்தில் வியர்வை அரும்பியது, கணநாதனின் ஒவ்வொரு சொல்லும் அவளை திக்குமுக்காடச் செய்தது. அவன் பேசிக்கொண்டிருப்பதனால் தனது தாய்க்கு கோபம் வந்து அதன் காரணமாக அவள் சற்று காரசாரமாக பேசத்தொடங்கிவிட்டதையும் அவதானித்தாள்.

ஒழுங்கையில் சனங்கள் சேர்ந்து, அவர்கள் அமளியாக கதைத்தவாறு கேற்றினூடாக விறாந்தையில் நடக்கும் நிகழ்ச்சிகளை பார்ப்பதையும் சாரதா கண்டாள். வெறியில் வந்து சத்தம்போடும் கணநாதன் மீது ஆத்திரம்தான் வந்தது. தான் வெளியே போனால் நிலைமை மோசமாகிவிடும் என்ற பயத்தினால் மனம் பதைக்க தொடர்ந்தும் கதவுக்கு பின்னாலேயே நின்று கொண்டிருந்தாள்.

செந்தமலர் இடத்தைவிட்டு இப்போதும் அசையவில்லை. காதில் விழும் விடயங்களில் இருந்து வந்து சத்தம் போடுகின்றவன் சாரதாவின் கணவன்தான் என்பதை அவள் உணர்ந்துகொண்டாள். ஆனால் எதைப் பற்றியும் சஞ்சலப்படாமல் பின் விறாந்தையில் அவள் அமைதியாகத்தான் இருந்தாள்.

''தம்பி எதற்கும் போட்டு பிறகு வாரும். இப்ப நீர் நிற்கிற நிலை சரியில்லை...'' என தங்கலட்சுமி சொல்ல, அதை கணநாதன் கேட்பதாக இல்லை.

''நான் திரும்பி வந்தாலும் இப்பிடித்தான் வருவன். உவளை நிம்மதியாக இருக்க விடமாட்டன். என்னைப் பேய்ப் பட்டம் கட்டிப் போட்டு அந்த டியூசன் மாஸ்டரோடை கதைக்கிறாள். அது கடைசி வரைக்கும் நடக்காது. ஓ கடைசியாகச் சொல்லுறன் இனி அந்த டியூசன் மாஸ்டர் இஞ்சை வந்தால் கொலை விழும். ஓ கொலைவிழும். கட்டாயம் நடக்கும்'' எனச் சொல்விட்டுக் கணநாதன் தடுமாறியவாறு கேற்றடியை நோக்கி நடந்தான்.

அவன் கேற்றினைத் தாண்டியதும் கேற்றில் குழுமி நின்றவர்களிடம் பரபரப்பு அதிகமானது.''

''சரியான தேவடியாள் கூட்டம். கட்டின புருஷன் இருக்கக் கள்ளப் புருஷன் பிடிக்கினம். நல்ல தாய்க்காரி அதற்கேற்ற பிள்ளையள்'' என்று அங்கு நின்றவர்களிடம் கணநாதன் சொன்னான்.

அங்கு நின்றவர்கள் பெரிதாகச் சிரித்தனர். ''கலியாணம் முடிச்ச பிறகு இப்பதான் ஞானம் பிறந்திருக்கோ'' ''உந்த வீட்டுக்காரரைப் பற்றிக் கலியாணம் முடிக்க முதல் தெரியாதோ.''

''சும்மா பல்லைக் காட்டப் பின்னால் கலைச்சுத் திரிஞ்சு கலியாணம் முடிச்சுப்போட்டு பிறகு எல்லாம் முடிஞ்சபிறகு தான் உண்மை தெரிஞ்சுதாக்கும். உதெல்லாம் கலியாணம் முடிக்கமுதல் ஆராயவேண்டிய விசயங்கள்.''

''அவளைக் கண்ணைக் காட்டி, மூக்கைக் காட்டி, நல்லாச் சிரித்தால் யார்தான் பின்னால் போகமாட்டினம்.''

''இப்ப எத்தனை பேரை ஏமாற்றியிருப்பினை.''

இப்படி அங்கு கூடிநின்ற பலரும் தங்கள் தங்கள் கருத்துக்களை அள்ளி வீசினார்கள். அவற்றில் சில கணநாதன் காதில் விழவில்லை. வேறு சில உறைப்பாக விழுந்தன. அதனால் கணநாதன் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை.

''அண்ணைமாரே தம்பிமாரே நீங்கள் சொல்லுறது எல்லாம் சரிதான். எனக்கு அப்ப ஒன்றும் விளங்கவில்லை. இப்பதானேவிளங்குது ஆனால் நான்தான் மண்ணைப் போனாலும் பரவாயில்லை. இனியும் யாரும் ஏமாறவிடமாட்டேன்.'' இவை யாரையும் ஏமாற்றவும் விடமாட்டன் என்று சொன்னான்.

அங்கு நின்றவர்கள் பெரிதாகச் சிரித்தார்கள்.

''ஏமாந்தவர்களுக்கும், ஏமாறப் போகிறவர்களுக்கும் தான் பிரச்னை. எங்களுக்கு என்ன'' என்று அவர்கள் சொன்னார்கள்.

சில நிமிடங்களுக்குப் பிறத கணநாதன் அந்த இடத்கை விட்டு நகர்ந்தான். கூடிநின்றவர்களும் பலவிதமாக விமர்சித்தவாறு அந்த இடத்தை விட்டுக் கலைந்தார்கள்.

பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றுச் சனங்கள் கலைந்தபின்னர் எப்படி ஒரு பயங்கர அமைதி ஏற்படுமோ அதே போல ஒழுங்கையிலும் பயங்கர அமைதி ஏறபட்டது.

சுஜாதாவும் பிரியாவும் விரைவாகச் சென்று கேற்றினைப் பூட்டிவிட்டு வீட்டினுள் வந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் எல்லாரும் வீட்டின் ஹாலினுள் கூடினார்கள். அதற்கு முன்னர் வெளி விறாந்தையின் லைட் அணைக்கப்பட்டு, வெளி விறாந்தையோடு தொடர்பாக இருந்த கதவும் பூட்டப்பட்டுவிட்டது.

ஹாலில் கூடியிருந்தவர்கள் சிறிதுநேரம் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை.

''நீங்களே சொல்லுங்கோ உப்பிடிக் குடிக்கிறவரோடை நான் எப்பிடிச் சீவிக்கிறது'' என்று சாரதா கேட்டாள். ''நான் இப்ப அடிச்சுக் கலைச்சிருப்பன் பிறகு மரியாதையில்லை என்று விட்டனான்'' என்றாள் சுஜாத்தா.


''அவர் வேறை ஒரு பொம்பிளையையும் வைசிருக்கிறாராம். பிள்ளையும் இருக்குதாம் அப்படியிருக்க என்னை த்திருத்த வெளிக்கிட்டுவிட்டார்'' என்று சாரதா சொன்னாள்.

''இனி டியூஷன் மாஸ்டர் இஞ்சை வரவேண்டாம் அவன் குடிச்சுப்போட்டு வந்து நெடுகக் கரைச்சல் குடுப்பன்'' என்று தங்கலட்சுமி சொல்ல பிரியா குறுக்கிட்டாள்

''அப்ப நான் அவருக்காக டியூஷன் எடுக்கக்கூடாதோ'' என அவள் கேட்டாள்.

''உன்னை யார் படிக்கக் கூடாது என்று சொன்னது. நீ வேறை எங்கையாவது டியூஷன் எடுக்கப் பார்'' என்று தங்கலட்சுமி சொன்னாள்.

[வளரும்]



# நாடோடிக் கதைகள்

தமிழில்: நீர்வை பொன்னையன்

## தந்திரோபாயம்

''பியேர்ஸ் பழங்கள் பற்களுக்கு நன்மைதரக்கூடியவை, ஆனால் மண்ஈரலுக்குத் தீமை விளைவிக்கக்கூடியவை. பேரீச்சம் பழங்கள் மண்ஈரலுக்கு நன்மைதரக்கூடியவை. ஆனால் அவை பற்களுக்குத் தீமை விளைவிக்கக்கூடியவை''

யாரோ ஒருவன் ஒரு முட்டாளுக்குக் கூறினான்.

முட்டாள் இது பற்றிச் சிறிது நேரம் சிந்தித்துவிட்டுச் சொன்னான்:

'இப்பொழுதிலிருந்து, நான் பியேர்ஸ் பழங்களைச் சாப்பிடும்பொழுது அவற்றை நன்றாகச் சப்பிச்சாப்பிடுவேனே யொளிய அவற்றை விழுங்கமாட்டேன். பேரீச்சம் பழங்களைச் சாப்பிடும்பொழுது அவற்றை முழுமையாக விழுங்கிவிடுவேன்.

## சாபம்

ஒரு கிராமத்தின் சாலை ஓரத்தில் ஒரு கோயில் இருந்தது அங்கே ஒரு தெய்வத்தின் மரச்சிலை ஒன்று இருந்தது.

அவ்வழியால் சென்ற ஒரு மனிதன் சாலையில் ஓர் அகழியைக் கண்டான். உடனே அவன் அந்தச்சிலையை இழுத்து வந்தான். அதை அந்த அகழிக்குக் குறுக்காகப் போட்டான். அந்தச் சிலையை ஒரு பாலமாகப் பாவித்து அந்த அகழியைக் கடந்து சென்றான்.

அவ்வழியே மற்றொரு மனிதன் வந்தான். தெய்வச்சிலை மண்ணோடு மண்ணாய்க்கிடப்பதை அவன் கண்டு மனவேதனையடைந்தான். அவன் அந்தச் சிலையை எடுத்துச் சுத்தம் செய்துவிட்டுக் கோயிலுக்குள் பழைய இடத்தில் வைத்தான்.

அவன் தனக்கு எதுவித பலியும் கொடுக்கவில்லை என்று அந்தச்சிலை கடும்கோபமுற்றது. தன்னை அவமதித்த அந்த மனிதனுக்குச் சாபமிட்டது. சாபத்தினால் அந்த மனிதனுக்குக் கொடுமையான தலைவலி ஏற்பட்டது.

தேவனின் சாம்ராஜ்யத்திலுள்ள தேவதைகள் இச்செயலினால் திகைப்படைந்தன.

''உன்னைக் காலால் மிதித்தவனுக்கு எதுவித தண்டனையும் நீ வழங்கவில்லை அவனை நிம்மதியாகச் செல்லவிட்டுவிட்டாய், உனக்கு உதவி செய்தவனுக்கு தண்டனை வழங்கியுள்ளாய் ஏன்?''

தேவனை அந்தத் தேவதைகள் இப்படி வினவின.

''உங்களுக்கு இது புரியாது. ஒரு நல்லவனைக் கொடுமைப்படுத்துவது மிகவும் சுலபம்.''
—தேவன் கூறினார்.

## ஏட்டுச் சுரைக்காய்

ஒரு பேரறிஞனிடம் ஒரு முககாலியிருந்தது. அது மிகவும் பதிவானது. அவர் அந்த முக்காலியில் இருந்து கொண்டு ஏதாவது எழுதப் படிக்க வேண்டுமென்றால் அதன் ஒவ்வொரு காலின் கீழும் செகற்களை வைத்து உயர்த்த வேண்டியிருந்தது. இது அவருக்குப் பெரும் தொல்லையாக இருந்தது.

அவர் இப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அநேக நாட்கள் கடுமையாகச் சிந்தித்தார். புத்தகங்களைப் புரட்டினார்.

ஒரு நாள் திடீரென அவருக்கு ஒரு வழி தோன்றியது முக்காலிப் பிரச்னை இலகுவில் தீர்ந்துவிடும் என்று மகிழ்ந்தார்.


அந்த முக்காலியை மேல்மாடிக்கு எடுத்துச் செல்லும்படி அவர் தனது வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்.

ஆனால் மேல்மாடியில் வைக்கப்பட்ட அந்த முக்காலிமீது அவர் உட்கார்ந்த பொழுது முன்னரைப் போலவே அது பதிவாக இருந்தது.

''மேல்மாடியில் உயரமாக இருக்கும் என்று மக்கள் கூறுகிறார்களே, ஆனால் அப்படி எனக்குத் தெரியவில்லை'' பேரறிஞர் கூறினார்.

# உலக சமாதானம் நல்வாழ்வுக்கு உழைத்துவரும் மகாயோகி

இன்று ஸ்ரீ பால சிவயோகீந்திர மகராஜ் சுவாமிகளது 32-வது பிறந்த நாள் விழாவை பல நாடுகளிலுள்ள சுவாமிகளது பக்தர்கள் கொண்டாடுகின்றனர்.



"எப்பொழுது உலகில் தர்மம் அழிந்து அதர்மம் அதிகரிக்கிறதோ அப்பொழுது நான் அவதரிக்கிறேன்" என்று பகவான் கண்ணன் பாரதப் போரில் பார்த்தனுக்கு உபதேசிப்பதைப் பகவத்கீதை எடுத்தியம்புகிறது. காலத்திற்குக்காலம் தோன்றும் அவதார புருடர்களின் அற்புத நிகழ்வுகள் இதற்குச் சான்று பகருகின்றன. இந்த வழியிலே இந்தியாவில் தலைசிறந்த ஆத்மீக ஞானியாக இன்று விளங்குகின்றார் ஸ்ரீபாலசிவ சுவாமிகள் இலங்கையில் நடைபெற்ற உலக இந்து மகாநாட்டிற்குச் சுவாமிகள் வருகை தந்து மகாநாட்டிற்கு ஒரு தனிச்சிறப்பை ஏற்படுத்தியவர் என்பது அனைவரும் அறிந்ததே.

ஸ்ரீ பாலசிவ யோகீந்திர மகராஜ் சுவாமிகளது 31-வது பிறந்த நாள் விழா ஆந்திரா மாநிலத்தில் ராஜமுந்திரி எனும் ஊரில் 27-7-85 காலை ஆரம்பமானபோது மழை பெய்யத்தொடங்கியது. மஹா யாகத்தை ஆரம்பிக்கமுடியாமல் இருப்பதை உணர்ந்த சுவாமிகள் வானத்தை நோக்கிப் பார்த்தவண்ணம் இருந்தார். சில நிமிடங்கள் செல்லவில்லை அதிசயிக்கத்தக்கவகையில் மழையும் நின்றது வானமும் வெளித்தது. கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

சுவாமிகள் தமது கண்களில் இருந்து கனல் எழுப்பிப் பஞ்சிலும் கர்ப்பூரத்திலும் நெருப்பையுண்டாக்கி ஹோம குண்டத்தை எரிய வைத்து யாகத்தைத் தொடக்கி வைத்தார்கள். பின்பு அனைவருக்கும் தமது கை அசைவினால் விபூதி, குங்குமம் வரவழைத்து வழங்கினார்கள்.

இத்தகைய தெய்வீக சக்தி வாய்ந்த சுவாமிகள் ஆந்திரா மாநிலத்தில் கடப்பை மாவட்டத்திலுள்ள நெல்லூரிலே தம் மனுப்பள்ளி என்னும் கிராமத்தில் 27-7-54ல் சிவபக்தியில் சிறந்த வெங்கட இலட்சுமி அம்மையாருக்கும் ஸ்ரீரேசையா அவர்களுக்கும் புதல்வராக 'ஈஸ்வரவரப்பிரசாத்' என்னும் பெயருடன் அவதரித்தார். இவர்தான் இன்று அவனிபோற்றும் ஸ்ரீபாலசிவயோகீந்திர மகாராஜ் ஆவார். ஆத்மீகம், கல்வி, மருத்துவம், சமாதானம் ஆகியனவற்றையே தமது குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் சுவாமிகள் நோய்வாய்ப்பட்டுத் துன்பப்படும் தமது பக்தர்களுக்கு ஆறுதல் கூறி நோயைக்குணப்படுத்தும் காருண்யசீலர். ஒரே நேரத்தில் பல இடங்களில் நடைபெறும் விழாக்களில் காட்சி கொடுத்து அன்பர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்குகின்றார். வேதாந்த தத்துவ அடிப்படையில் சர்வதேச சமாதானத்தையும் நல்வாழ்வையும் நிலைநாட்டுவதற்கு அயராது உழைத்துவருகின்றார். இந்நோக்குடனேயே சுவாமிகள் ஸ்ரீபாலசிவ சர்வதேச சமாதானநிறுவனத்தை உருவாக்கியுள்ளார். இந்நிறுவனம் உலகிற் பலபாகங்களிலும் கிளைகளைப் பரப்பிப் பெருந்தொண்டாற்றி வருகின்றது.

மக்களின் கல்விநலன் கருதி ஆந்திரப்பிரதேசத்தில் இரண்டு பட்டப்படிப்புக் கல்லூரிகளையும் ஒரு உயர்நிலைப்பள்ளியையும் இரண்டு கனிஷ்ட கல்லூரிகளையும் ஆரம்பித்து அவற்றைத் தமது மேற்பார்வையில் நடாத்திவருகின்றார். மக்கள் நோய்ப்பிணி தீர்க்க யோகமகிமையால் மூலிகைகள் மூலம் பல அற்புத சக்தி வாய்ந்த மருந்துகளைக்கண்டு பிடித்து வழங்கியும் வருகின்றார்.

இரவு நேரம் மின்னும் விளக்கு வெளிச்சத்தில் மாணவர்கள் ஒன்றுகூடிப் பாடம் படித்துக்கொண்டிருக்கிறார்கள் விளக்கின் வெளிச்சம் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. இன்னும் சற்றுநேரம் சென்றால் விளக்கு அணைந்துவிடும் எண்ணெய் இல்லாததினால் விளக்கு அணையப் போகின்றது என்பதை உணர்ந்த மாணவர் ஒருவர் நீரை அள்ளி விளக்கில் விடுகின்றார். திடீரெனப் பிரகாசிக்கின்றது விளக்கு வெளிச்சம். விடியும் வரை அந்த விளக்கு எரிந்தது.

அன்று அணையவிருந்த விளக்கிற்கு நீரையூற்றிஎரியவைத்து அற்புதத்தை ஆரம்பித்த அந்த மாணவன் விஞ்ஞானப்பட்டப் படிப்பை மேற்கொண்டு தெலுங்கு, ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலாம் மொழிகளில் சரளமாகப் பேசியும், கவிதைகள் இயற்றியும் ஆன்மீக வழியில் சமாதான வாழ்வுக்கு வழிகாட்டி வருகின்றார்.

எஸ் ஐ. தனபாலசிங்கம்
செயலாளர்,
ஸ்ரீபாலசிவ சர்வதேச
சமாதான நிறுவனம்
யாழ்ப்பாண கிளை

## ராகு, கேது மாற்றம்:

# முன்னெச்சரிக்கையோடு செயல்படுங்கள்

நிகழும் அக்ஷய வருஷம் ஆடி மாதம் 13-ம் திகதி செவ்வாய்க்கிழமை (1986-07-29) அன்று முன் இரவு மீனராசிக்கு இராகுவும், கன்னி இராசிக்கு கேதுவும் செல்லுவதால் இக்கிரகங்கள் மாறும் தினத்தன்று யாபேரும் அவதானமாக நடந்துகொள்வது நன்று.

குறிப்பாக விஷக்கிரகங்கள் - அதாவது பாம்புக் கிரகங்கள் என்று வர்ணிக்கப்படும் கிரகங்களின் மாற்றம் ஆதலால், தற்போதைய காலகட்டத்தில் உலகத்தின் மூலைமுடக்கெல்லாம் விஷ ஆயுதங்களும், வாயுக்களும் பலமடைந்து வரும் காலம் இதுவாக அமைகிறது

எனவே இக்காலங்களில் அரசர் மத்தியில் அவநம்பிக்கையும் அவசரகோலமும், குடி மக்களுக்குக் கெடுதலும், குரோதமும் ஏற்படக்கூடிய காலமாகும். ஆகவே இக்கிரக மாற்றத்தின்போது மக்கள் விழிப்புடன் நடந்துகொள்வது விரும்பத்தக்கது.

பொதுவாக எத்தேசத்தவர்களானாலும் இக்கிரக மாற்றத்தன்று அட்டாலவதானப் நன்று. மேட இராசிக்கு (இலங்கைக்கு) விரயஸ்தானமாகிய பன்னிரண்டாம் இடத்திற்கு இராகுவும் சத்துருஸ்தானமாகிய ஆறுமிடத்திற்கு கேதுவும் சஞ்சரிப்பதால் இக்காலங்கள் சத்துருவையும் மித்துருவாக்கக்கூடிய காலமாகும். இதேபோன்று மித்துருவையும் சத்துருவாக்கக்கூடிய காலமாகும்.

எனவே இக்காலத்தில் சிறியவர்களாயிருந்தாலும் சரி, பெரியவர்களாயிருந்தாலும் சரி, மாணவர்களாயிருந்தாலும் சரி, மணமானவர்களாய் இருந்தாலும் சரி சிந்தித்துச் செயல்படுவது விரும்பத்தக்கது.

மேலும் வணிகர்களுக்கும், வாகனச் சொர்தக்காரர்களுக்கும், சாரதிகளுக்கும் சுபபலன் இருப்பினும் இடையிடையே பல எதிர்ப்புகளையும் இன்னல்களையும் ஆபத்துக்களையும் எதிர்நோக்கவேண்டி வரும்.

பிறதேச பிரயாணங்களை எதிர்பார்ப்போர்களுக்குச் சந்தர்ப்பங்கள் சாதகமாக அமைவது கஷ்டம். எனவே கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்வது நன்று

குறிப்பாக எந்த இராசிக்காரர்களாயிருந்தாலும் சரி முயற்சிக்கும் விடயங்கள் தடைபடாது நடைபெற வேண்டி ஸ்ரீ பத்திரகாளி அம்பாளையும், ஸ்ரீ விக்கினேஸ்வரப் பெருமானையும் வழிபட்டு ஞாயிற்றுக்கிழமைதோறும் உபவாசம் இருந்து இஷ்ட தெய்வங்களையும் வழிபட்டு வரச் சகல நன்மையும் உண்டாம்.

இந்த விரதத்தை மாணவர்கள் தவறாது அனுஷ்டித்துவருவது நன்மையளிக்கும்.

திருமலை
க. வே. ரவீந்திரன்

# ஆரம்பக் கல்வி

(6ம் பக்கத் தொடர்ச்சி)

டனவே தவிர அவை தீர்த்து வைக்கப்படவில்லை கல்வியில் மாற்றம்தேவையென உணரப்பட்டபோதும், நாடு ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்தமையினால், அரசின் நோக்கங்களுடன் ஒத்துப் போகவேண்டியிருந்தது.

1931இல், டொனமூர் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படவே இலங்கையின் கல்வியில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியதெனலாம். அரசாங்க சபையில், கல்வி, அமைச்சர் ஒருவரின் பொறுப்பின்கீழ் வந்தது. முதற்கல்வி அமைச்சராகத் திரு. சீ. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா நியமிக்கப்பட்டு, அவரின் தலைமையில் கல்விச் சீரமைப்புக்கான குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. 1943இல் கல்வி பற்றிய இவ்விசேட குழுவின் அறிக்கையுடன் குடியேற்ற ஆதிக்கக் கல்வி முறையை மாற்றுவதற்கான முதல்முயற்சி ஏற்படுத்தப்பட்டது. இலவசக் கல்வி. தாய்மொழி மூலம் கல்வி, அனைவர்க்கும் கல்வி, கல்வியில் பாகுபாடின்மை, கிராமப்புறங்களில் பாடசாலைகளை அமைத்தல், தொழிற் கல்வியும் பாடவிதானத்தில் இடம் பெறுதல் என்னும் விதப்புரைகள் உயர்வர்க்கத்தினருக்கேயான கல்விமுறையின் அடித்தளத்தையே தாக்கின.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பின்னர், மேற்குறிப்பிட்ட சீர்திருத்தங்கள் ஓரளவிற்கேனும் நடைமுறைப்படுத்தப்பட்டமையினால் கல்விகற்க முன்வருவோர் தொகையில், அதிகரிப்பு, கல்வி வசதிகள் விரிவடைந்தமை, கல்விக்கான செலவு அதிகரிக்கப்பட்டமை என்பன குறிப்பிடத்தக்க மாற்றங்களாகும். 1960—61ல் நாடு முழுவதிலும் ஒரே சீரான கல்வியை அளிக்கும் நோக்கத்தோடும் கல்விவாய்ப்புக்களைச் சனநாயக ரீதியில் சமனுக்கும் இலக்கோடும் உதவி நன்கொடை பெற்று வந்த பாடசாலைகள் அரசினால் கையேற்கப்பட்டன. இதனால், சனநாயகப்பண்புகள் நிறைந்த கல்வியை அளிக்கும் முழுப் பொறுப்பையும் அரசு ஏற்றுக் கொண்டது எனினும், பாடசாலைஅமைப்பு, கலைத்திட்டம், கல்விப் பொருள், கற்பித்தல் முறைகள், கல்வியின் விரிவு தொடர்பாக தேசியத்தன்மை மிளிரக்கூடியமுறையில், நாட்டின் சமூக, பொருளாதாரத் தேவைகளை உளங்கொண்டு முழுமையான மாற்றங்கள் ஏதும் இடம்பெறவில்லை. பொதுவாக மாற்றங்களுக்கு இசைந்து கொடுக்காத மனப்பாங்கினைக் கொண்ட மக்களின் நிலைப்பாடு, மாற்றங்களைக் கொண்டுவரவிரும்பிய அரசாங்கங்களின் நிலையாமை, கல்வியைத் தேசிய அபிவிருத்தியுடன் இணைத்துப் பார்க்காமை என்பன முழுமையான மாற்றங்களைக் கல்வியில் ஏற்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாக இருந்தன. இதனால், சுதந்திரத்திற்குப் பின்னரும் கால்நூற்றாண்டுக் காலம்வரை குடியேற்ற நாட்டுக் காலக் கல்விமுறைகளே தொடர்ந்திருந்தன

1970ம் ஆண்டில், கல்வியில் குறைபாடு காரணமாக சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது. குடியேற்ற நாட்டாட்சிக்காலக் கல்வியையே தொடர்ந்து கற்றுவந்த இளைஞர்கள் யாவர்க்கும் உடைநலங்கா உத்தியோகங்களை வழங்கமுடியாதநிலை ஒருபுறம் இருந்தது. இத்தகையோர்களுக்கு மாற்றுத் தொழில்கள் செய்வதற்கு வேண்டிய பயிற்சிகள், ஆற்றல்கள், மனப்பாங்குகள் என்பனவும் இல்லாமலிருந்தன. இவற்றின் விளைவாக இளைஞர்கள் மத்தியில் வேலையின்மையும், அதிருப்தியும், மனவுடைவுகளும் தோன்றின. சமூகத்தில் அமைதியின்மையும், கிளர்ச்சிகளும் எழும் சூழ்நிலைகளும் உருவாகின. கல்வியை நாட்டின் தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்படவேண்டிய நிலை நன்கு உணரப்பட்டது. 1972இல் கல்வி மாற்றங்கள் முதன்முறையாக முழுமையான அளவில் கொண்டுவரப்பட்டன. ஆரம்பக் கல்வியில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் இன்றுவரை நீடித்துப் பயனளித்துக் கொண்டிருக்கின்றன.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில், பயில்வோரது தேவைகளுக்கு முதன்மையளிக்கப்பட்டுள்ளது குழந்தையை மையமாகக் கொண்டு கற்றல் ஒழுங்கு செய்யப்படுகிறது. வகுப்பறைத் தோற்றத்தில மாற்றமேற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலத்தின் வளர்ந்தோர் ஆதிக்கமோ, வகுப்பில் நிலவிய செயற்கைச் சூழலோ தற்பொழுது காணமுடியாது. கற்பித்தலிலும் கற்றலுக்கே முதன்மை கொடுக்கப்படுகிறது.

கற்றல் செயல் மூலம் நடைபெறுகிறது. பாடவிதானம் ஒன்றிணைந்ததாக உள்ளது. வெவ்வேறு பாடங்களாகக் கூறுபடுத்தப்பட்ட பாடத்திட்டம் தற்பொழுது இல்லை. பாடங்களுக்கிடையே தொடர்புகளைகாட்டி ஒன்றிணைத்து கற்பிக்கப்படுகின்றன. பொருத்தமற்றவற்றை மனனம் செய்து கற்கும் சுமை இப்பொழுது குழந்தைகளுக்கு இல்லை. வகுப்பறையில் ஆசிரியரையே நம்பியிருக்காமல் மாணவன் தானகவே விடயங்களைத் தேடிக் கற்கின்றான். வகுப்புக்கு வெளியே பலவற்றை அவதானித்தும் பரிசோதனைகள் நடத்தியும் கற்கின்றான். கற்றல் மகிழ்ச்சி நிறைந்ததாகவே உள்ளது. தம்மை எதிர்நோக்கும் பிரச்னைகளைத் தீர்க்கப் பயில்கின்றான் அறிவுடன் பலவேறு திறன்களையும் சிறந்த மனப்பாங்குகளையும் பெற்றுக் கொள்கின்றான். குழுக்களாகி வேலைசெய்வதால் கூட்டுணர்வு பெறுகின்றான். பிள்ளையின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கும், ஆளுமை விருத்திக்கும் ஆரம்பக் கல்வி துணைநிற்கும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மொழி, கணிதம், சுற்றாடல், ஆக்கம்' அழகியல் எண்ணக் கருக்களை விருத்தி செய்யும் முறையில் பாடவிதானம் அமைந்துள்ளது. ஆண்டு நான்கிலிருந்து சென்ற ஆண்டு தொடக்கம் அடிப்படை விஞ்ஞான எண்ணக் கருக்களை விருத்திசெய்யக் கூடிய வகையிலும் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. புதிய ஆரம்பக் கல்வித்திட்டத்தைச் செயற்படுத்துமுகமாகத் தற்பொழுது ஆசிரியர்களுக்குச் சேவைக்காலப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

மனிதனை, எல்லாவகையாலும் பரிபூரண வளர்ச்சி பெற்ற முழுமனிதனாக ஆக்கும் கல்வியின் ஆரம்பநிலை அதிமுக்கியம் வாய்ந்தது என்பதை உணர்ந்து செயற்படுவோமாக.

# வெறி நாய்கள்

சொர்க் கத்துத் தீவினிலோர்
சொத்தை வந்தது
துயர் தருமோர் புற்றுக்கட்டி
தோன்றிப் பிட்குது
எத்தனையோ மருத்துவர்கள்
வந்து பார்த்திட்டார்
எவராலும் தீராத
நோயாய்ப் போய்ச்சுது
கட்டி வந்த காரணத்தைக்
கண்டு பிடித்திடக்
கை கொடுப்பார் யாருமில்லை
கருத்திற் கொண்டிடார்
பட்ட பெரும் பாடுகளால்
பத்தியம் கெட்டு
பருத்த கட்டி வெடிக்கின்
முழுத்
தீவும் போகுமாம்
கட்டியினை வெட்டிப் பிரித்
திட்ட போது தான்
கந்தர்வ லோகத் துயிர்
காக்க முடியுமாம்
வெட்ட விடா திறக்கும்வரை
பார்த் திருக்கிறார்
வெறிநாய்கள் கூட்டம் ஒன்று
பதவிப் பேய்களாய்

-தில்லைச்சிவன்.

# கிளிநொச்சியின்

(5 ம்பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர். கூடுதலானோர் குண்டுகளுக்கு இரையாகிப் பலியாகி உள்ளனர். படுகாயங்களை அடைந்துள்ளனர். சில தினங்களாகச் சடலங்கள் அப்புறப்படுத்த முடியாத நிலையில் பிணவாடை வீசிய பகுதியும் இந்தத் திருநகர்தான்.

(இன்னும் வரும்)

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் ஜேர்மனி
பிரான்ஸ் கனடா

நேரடியான உடனடிப் பிரயாணம்

நாளுக்கு நாள் பயணமாகிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

**குவைற்**

டிரைவர் (Driver), பணிப்பெண்

**சவுதி அரேபியா**

கிளினேர்ஸ்

உடனடி பிரயாண ஒழுங்கு செய்துகொடுக்கப்படும். அத்துடன் பாஸ்போட், பொலிட், விசா, ரிக்கட்டிங் என்பனவும் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

## Group Atlantic Travels

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக]

V. M. Balasingam
HOTEL ORCHID INN,
571/6, GALLE ROAD,
WELLAWATTE, COLOMBO-6.
T. P. 583916

A 1004



## TOEFL

வெளிநாட்டுக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் மேற்படிப்புக்களைத் தொடர விரும்புவோருக்கும் அந்நாடுகளில் வேலைவாய்ப்புக்களை எதிர்பார்ப்பவர்களுக்கும் TOEFL பரீட்சையில் திறமைச்சித்தி அவசியம்.

Full Course Fees Rs. 250/-

## SPOKEN ENGLISH

English is caught rather than tought and the best way of learning English is to speak it.

இரண்டுமாத துரிதப்பயிற்சிநெறி. ஆர்வமுள்ளோருக்கு அரிய சந்தர்ப்பம். வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

Full Course Fees Rs. 100/- only.

விரிவுரைகள்:- பிரபல ஆங்கில விரிவுரையாளர் கந்தையா நவரேந்திரன்

Both Classes will be held during Weekends.
Commencement:- 9-8-86
வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்.

ICMA, AAT, IDPM, IAB, Computer-Programming, Radio and T. V. Engineering வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## CANTABIA INSTITUTE

21, MAIN STREET, JAFFNA.
T. PHONE: 24201.

[A-1009]


## 1-வது பிறந்ததின வாழ்த்து

### செல்வன் கிருஷ்ணராஜ் நாராயணசர்மா

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுதசுவாமி கோவில் பிரதான குரு பிரம்மஸ்ரீ நாராயணசர்மா-கல்பனா கௌரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கிருஷ்ணராஜ் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (27-07-86 ஞாயிற்றுக்கிழமை வில் ஊன்றிப பிள்ளையார் கோவிலில் கொண்டாடுகிறார்.

இவரைஅப்பா, அம்மா, அப்பம்மா, கீரிமலைத் தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அண்ணன்மார், அக்கா, மச்சான்மார், மச்சாள்மார் ஆகியோர் சகல செல்வங்களும் பெற்று நீடூழி காலம் வாழவாழ்த்துகிறார்கள்.

A 959


# நெஸ்பிரே பருகி வெற்றியீட்டுங்கள்!

## ஒவ்வொரு பக்கெட்டிலும் அன்பளிப்பு... புலமைப்பரிசில் வெல்வதற்கான வாய்ப்பு.




நெஸ்பிரே அருந்துவோரே!

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு நெஸ்பிரே, உடன் நெஸ்பிரே பக்கெட்டிலும் உங்களுக்கு இலவச அன்பளிப்பு. அத்துடன், ரூ. 10,000 பெறுமதியான புலமைப்பரிசில் ஒன்றை வெல்லும் அதிர்ஷ்டம் உங்களுக்குக் கிடைக்கலாம்.

இலவச அன்பளிப்புகள்

விசேட ஊக்குவிப்பு விளம்பரத்தை முகப்பில் கொண்ட ஒவ்வொரு நெஸ்பிரே பக்கெட்டினுள்ளும் பின்வரும் இலவச அன்பளிப்புகளில் ஒன்று இருக்கும்: நான்கு அற்புதமான குறிப்பேடுகள் இரண்டு சிறந்த நிறப் பேனைகள்.



நெஸ்பிரே புலமைப்பரிசில்கள்

ஒவ்வொரு நெஸ்பிரே குறிப்பேட்டின் பின் அட்டை இடதுபக்க அடி மூலையிலும் 1,2,3, அல்லது 4 என்று இலக்கமிடப்பட்ட, கிழித்தெடுக்கக்கூடிய அடையாளத் துண்டுகள் உள்ளன. இவை நான்கையுமே சேகரித்து, உங்கள் பெயர், முகவரியை எழுதி, கூப்பனில் காணப்படும் வாக்கியத்தையும் பூர்த்திசெய்து பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

நெஸ்பிரே புலமைப்பரிசில் போட்டி
த.பெ.எண் 189, கொழும்பு.

விதிகள்.

(அ) ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 1, 2, 3, 4 ஆகிய நான்கு இலக்க அடையாளத் துண்டுகளும் இணைக்கப்பட வேண்டும்.
(ஆ) விண்ணப்பங்கள் தனித்தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும்.
(இ) போட்டி 1986 ஓகஸ்ட் 15 வரை நடைபெறும். ஆகவே, விண்ணப்பங்கள் அத்திகதியில் அல்லது அதற்கு முன்பு எமக்குக் கிடைக்க வேண்டும்.
(ஈ) வெற்றியீட்டும் 5 பேரைத் தெரிவுசெய்வதற்கான சீட்டிழுப்பு 1986 ஓகஸ்ட் 18 நடத்தப்பட்டு, முடிவுகள் இந்தப் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.
(உ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. எவ்வித கடிதத் தொடர்புக்கும் இடமில்லை.
(ஊ) நெஸ்லே நிறுவனம், நியமிக்கப்பட்ட நெஸ்பிரே விற்பனை நிலையங்கள், தொம்ஸன் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களும் குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கையில் வாழும் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

கூப்பன்
பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
நெஸ்பிரே-வளரும் ..............................

வெல்லுங்கள்! ஒவ்வொன்றும் ரூ 10,000/- கொண்ட 5 புலமைப் பரிசில்கள்




### நெஸ்பிரே-வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.

JWT NJL 1956 Licence No S 522

A 773


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணித்த இல. 478/3, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராமநாதன் ஜெயபாலனின் மரணச்சொத்து விடயத்தில்,

மரணித்தவர்.

ஜெயபாலன் கைம்பெண் இரத்தினேஸ்வரி, 478/3, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்.

வழ. இல. ரி/3980

எதிர்

1 ஜெயபாலன் சாந்திபூசன்,
2 ஜெயபாலன் மகள் மேனகாசாந்தி,
3 ஜெயபாலன் மகள் ஜனிதாசாந்தி, எல்லோரும் 478/3 கே கே எஸ். வீதி, யாழ்ப்பாணம், பராயமற்றவர்களின்
4 வழக்குப்பாதுகாவலராக. இராமநாதன் ஜெயராசா, 35/9, விபுலானந்த வீதி, யாழ்ப்பாணம்.

எதிர்வாதி.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதாக இத்தால் அறியப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 22ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1986ம் ஆண்டு ஆடி மாதம் 11ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைவு:
இ ஜெயசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

C 8686

# இவ்வாரம் எப்படி?

## இன்று

மாதம்: ஆடி
திகதி: 11 (1986-07-27)
கிழமை: ஞாயிறு
திதி: ஷஷ்டி
மு.ப வரை
நக்ஷத்திரம்: ரேவதி
பி.இ.வரை

### மேடம்

கவலைகள் தாக்கும். சிறிவரும் கோபத்தை அடக்க முடியாமல் திண்டாடுவீர்கள். கொள்கையிற் கோணலால் நல்ல சந்தர்ப்பத்தை இழக்க நேரிடலாம். பிள்ளையொன்றின்பிணி கவலையைக் கொடுக்கும்.

### இடபம்

நீண்டநாள் எதிர்பார்த்த விடயம் நிறைவேறும். பெரிய இடத்துச் சிநேகிதம் பெருமையைத் தேடித்தரும். வரவிலும் உயர்வுகாணும். வியப்பூட்டும் செய்திக்கும், புதிய நண்பர்களின் உறவுக்கும் இடமுண்டு.

### மிதுனம்

தொடங்கிய விடயம் பாதியில் தடைப்படும் பொருட்செலவுக்கும் இடமுண்டு குடும்பத்தில் உடல்நலக்குறைவு தோன்றும், சகோதர வழியால் வரவுச்கும் இடமுண்டு. இறையருளும் உண்டு.

### கடகம்

அறிவுப் பசிக்குதாராளமாக விருந்துகிடைக்கும். ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கும். குடும்பத்தில் அமைதியான சூழ்நிலைதென்படும் வாகனச் சாரதிகள் பொது மக்களின் நன்மதிப்பைப் பெறுவர்.

### சிங்கம்

குடும்பவாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தையளிக்கும். அடக்கம் வேண்டும். வசதிகள்பெருகும். புத்திரவழியால் புகழும்கிடைக்கும். நண்பர்களிடமிருந்து வரவேற்புக் கிடைக்கும்,

### கன்னி

எதிலும் அவதானம் நன்று வெளியிடத்து பயணம் வேதனை ... தின் தாக்குதலால் நெஞ்சம் புண்ணுகும். பொறுமைவேண்டும் வயிற்றுக் கோளாறும் தோன்றக்கூடும். உணவு விடயத்தில் அதிக கவனம்வேண்டும்.

### துலாம்

குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். உறவினர் வருகைக்கும் இடமுண்டு. தொழில்தனில் தொல்லையும் நீங்கும்.

### விருச்சிகம்

பணத்தைக் கொடுத்தும் பகையைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். தொழில்துறையிலும் சோர்வு தொன்படும், நண்பர்கள் மூலம் புதியதொல்லைக்கும் இடமுண்டு. நிதான புத்தியுடன் நடந்து கொள்ளவும்.

### தனுசு

குருவின் ஆசியுடன் குறிக்கோள் வெற்றிக்கும் இடமுண்டு நேர்முகப் பரீட்சை வெற்றியைத்தரும். பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். புண்ணிய காரியங்களிலும் ஈடுபாடு ஏற்படும்.

### மகரம்

வெற்றிப் பாதையில் வீறு நடைபோடுவீர். தொழில் துறையில் உசாகப காணப்படும். திடீரென வரும் வரவால பிணககுகள் தீரும் நீண்டநாள்தொடர்பில் மாற்றம் ஏற்படும். பெண்கள் மிகவும் அவதானம்வேண்டும்.

### கும்பம்

மக்கள் மூலம் மகிழ்ச்சிகமான சம்பவங்கள் இடம் பெறும். உள்ளத்திலும் உவகைதுள்ளும். சகோதர வழிச் சந்தோஷத்திற்கும் இடமுண்டு. எதிர்பார்த்த வரவுக்கும் இடமேற்படும்.

### மீனம்

குறுக்குவழித்தலையீடு தவிர்க்கப்படல் வேண்டும். திரை மறைவில் சதிவேலைகள் நடைபெறும். குடும்பத்திலும் குறை கேட்கநேரிடும். நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் வேண்டும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

## முஸ்லிம்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஞாயிறு கொழும்பு பல்கலைக்கழகத்திலும் ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்திலும் தமிழ் மொழி மூலம் கலை, வர்த்தக முகாமைத்துவ பாடநெறிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு உயர்கல்வி அமைச்சை வலியுறுத்தியுள்ளது.

இம்முறை பல்கலைக் கழகங்களுக்குத் தமிழ் மொழி மூலம் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம்மாணவர்களிற்பலர் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் எழுந்துள்ள நிலைமையைத் தொடர்ந்தே முஸ்லிம் கல்வி மாநாடு இக் கோரிக்கையை விடுத்துள்ளது. [சிவ]


சகல மதுபான விற்பனையாளர்களுக்கும்
மதுப் பிரியர்களுக்கும்
# ஓர் நற்செய்தி!

யாழ். பாம் புரடக்ஸ் என்ரபிறைஸ் ஸ்தாபனத்தின் ஸ்ரார் பிராண்ட், திறீ ஸ்ரார் பிராண்ட் தென்னை, பனஞ்சாராய உற்பத்திகளின் விலைகள் 05-07-86-ம் திகதியிலிருந்து குறைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஏற்கனவே பழைய விலையில் கொள்வனவு செய்த மதுபான விற்பனையாளர்களும், பாவனையாளர்களும் எமது பிரதேசத்தில் எதுவித முதலீடுமின்றி மேற்கொள்ளப்பட்ட இப்பிரதேச சாராய உற்பத்திக்கு அளித்த பங்களிப்பிற்கு எமது நன்றிகள்.




மதுப்பிரியர்களின் அற்புத சாராயம்!

# "ஸ்ரார் பிராண்ட்"

மொத்த விலையில்
★ தென்னஞ்சாராயம் — விலை ரூபா 50/-
★ பனஞ்சாராயம் — விலை ரூபா 60/-

ஆடி மாதப் புதிய வெளியீடு!




# திறீ ஸ்ரார்
## பழைய பனஞ்சாராயம்
THREE STAR Old Palmyrah Arrack
(விலை ரூபா 75/-)

வெளிநாட்டுத் தொழில்நுட்ப ஆலோசனையுடன்
வட இலங்கையில் தயாரானது.


சகல மதுபான விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இங்கே நாடுங்கள் ∴

உற்பத்தியாளர்கள்:
## பாம் புரடக்ஸ் என்ரபிறைஸ்,
யாழ்ப்பாணம்.

மதுசாரம் ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும்

[A1013]

## 27-07-86 இன்று 31-ம் நாள் நினைவஞ்சலி



**ஐயாத்துரை அமிர்தநாதன்**
(ஜேரான் அமிர்)

அன்னை மடியில்;
20-09-1964
தமிழன்னை மடியில்:
27- 6-1986

சோகம் துயிலெழுப்பத்
துவண்டு விழிததும்பும்
யோகம் படைத்த
ஓ னத்து உயிர்கொடுக்க
நாசப்படையின் நடுநின்று
போரிட்ட அமிர்
மட்டக்களப்பு கிரான்
ரணகளத்தில் வானுற்
ருன்
ஊர்மலே என்ற
ஒப்பில் பெருவீரர்
நீர் எங்கள் கண்கண்
களில்
நெருப்பெங்கள்
நெஞ்செல்லாம்
வேங்கை மறவாவிடியல்
தனை நோக்கி
ஓங்கும் அணிநாம்
உன்னைத்தினம் நினைப்
போம.

ஐயா ஐயாத்துரை,
அம்மா: ஞானம்பாள்,
அக்காமார்:
அகிலாம்பாள்,
ஜெகதாம்பாள்,
புவனம்பாள்.
அண்ணன்மார்:
விக்கினேஸ்வரன்,
ரவீந்திரன்,
ஜெகநாதன் (சவூதி
அரேபியா),
கிருபாகரன் (சவூதி
அரேபியா), மற்றும்
மைத்துனர்மார், மைத்
துனிமார், அன்ரிமார்,
சித்தப்பாமார், மாமன்
மார், மாமிமார், தம்பி
மார், தங்கைமார் மற்
றும் உறவினர்கள்.

மயிலியதனை,
தொண்டமனறு.
C 3692


**லிடோ**
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ்-சரிதா
நடித்த
**மௌனகீதங்கள்**
(கலர் - புதிய பிரதி)
எமது அடுத்த
வெளியீடு
**புதுமைப் பெண்**
[புதிய பிரதி]

**வெலிங்டன்**
வெண்திரையில்
எமது அடுத்த வெளியீடு
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி
பயங்கர சண்டைகள்,
தந்திர காட்சிகள்,
நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனா
வீரப்பா, நம்பியார்
**தங்கமலை ரகசியம்**
[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்டது.


## மக்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"விடுதலைப்பயணத்தில் கொள்கை நடைமுறை தொடர்பான முரண்பட்ட கருத்துக்கள் உருவாவது தவிர்க்க முடியாததே. இவற்றை சரியான முறையில் அரசியல் ரீதியில் தீர்ப்பதன் மூலமே எம்மை நாம் திருத்திக்கொண்டு பொறுப்புள்ள முறையில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்பதில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினராகிய நாம் தெளிவாகவும், உறுதியாகவும் உள்ளோம். இதற்குப் புறம்பான முறையில் செயற்படுபவர்களுடைய நடவடிக்கைகள் நாம் முற்ருக நிராகரிக்கின்ரேம். களததில் விடுதலைப் போராட்டத்தை சரியான முறையில் முன்னெடுப்பதற்குரிய அனைத்து வேலைத்திட்டங்களிலும் உறுதியாய் செயற்படும் அதே வேளை மக்களுடனும் இணைந்து செயற்படுவோம்.

"மக்களுடைய விமர்சனங்களை நாம் கவனத்திற் கொண்டு விடுதலைக்கான வேலைகளில் ஈடுபடுவோம்.

"தன்னிச்சையாகவும், தனிநபர் முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு கழகத்தின் பெயரால் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளில், ஈடுபடுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



**பண்டிதர்**
**ஆ. சேயோன்**
(ஆங்கில ஆசிரியர்)

ஆண்டவன் படைப்பு:
18-09-1951
அரக்கர் அழிப்பு;
27-07-1983

பண்ணாகப் பதிதன்னில்
பண்புடனே தோன்றியநீர்
தண்ணாரும் தமிழ்
மொழியில்
தகுகி மிகு பண்டிதராய்
எண்ணா நம்வியந்திடவே
ஏற்றமது பெற்றிட்டீர்
கண்ணாரும் தமிழ்காக்க
காசினியில் புறப்பட்டீர்
வெங்கொடுமை மிகுந்த
தொரு
வெலிக்கடையாம்
சிறைதன்னில்
சிங்களத்துக் காடையரால்
சிதைந்ததுவோ உம்மியிரே
அங்கமெலாம் நொந்து
பெற்ற
அன்னையார் வாடிவிட
பங்கமிலாச் சோதரரும்
பரிதவித்தார் உம்பிரிவால்.
உன் ஆன்மா சாந்தி
யடைய இறைவனைப்
பிரார்த்திக்கிரும்.

உம்பிரிவால் வாடும்:
அம்மா, அக்கா, தம்பி,
மருமக்கள், தோழர்கள்.

பண்ணாகம்,
சுழிபுரம். A 960

## 'ஹெலி' வீசிய அந்தப் பிரசுரம்
# பேராசிரியர் சிவத்தம்பி விளக்கம் தருகிருர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"என்னைப்பற்றிய குறிப்புக்கள் கொண்ட, பெயரிடப்படாத, இடம், திகதி இடப்படாத ஒரு துண்டுப் பிரசுரம் ஹெலிகொப்டர்களிலிருந்து போடப்பட்டதாக அறிந்தேன். அதன் பிரதி ஒன்று மிகப்பிந்தியே என்கைக்கு எட்டியுள்ளது. அத்துண்டுப் பிரசுரத்திலே கூறப்பட்டுள்ளவை முற்றிலும் பொய்யானவையென்றும், உண்மைக்குப்புறம்பானவையென்றும் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். தமிழர் உரிமைக்காகப் பாடுபடும் எவருடனும் எனக்கு எவ்வித முரண்பாடும் இல்லை என்பதையும் வலியுத்த விரும்புகின்றேன்."

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி விடுத்த ஒரு அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

"ஹெலிகொப்டரிலிருந்து யார், எவற்றைப் போடுவார்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரிந்ததே. துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்ட பொழுது (மட்டக்களப்பு, வன்னிப்பகுதிகளில்) அவை எதற்காக, எத்தனை கயிறு திரிப்புக்களுடன் செய்யப்பட்டன என்பதும் நமக்குத் தெரிந்ததே. ஒவ்வொருமுறையும், அவற்றின் நோக்கம் தமிழரின் ஒற்றுமையைக் குலைப்பதும்மனோதிடத்தைக் குறைப்பதுமேயாகும். இப்பொழுது விழுந்துள்ள இந்தத் துண்டும் அதே நோக்குடையதே. இதில் பொய்களும், திரிபுகளுமே இடம் பெற்றுள்ளன. தமிழ் மக்களின் முழுமையான போராட்டத்திற் பங்காற்றுவோரைப் பிளவுபடுத்துவதும் அந்நியப்படுத்துவதுமே இதன் நோக்கமாகும்- நடக்காதனவற்றை நடந்ததாக முழுப்பொய் கூறுகின்றது.

"வல்வைப் பிரஜைகள் குழுவின் நிர்வாகக்குழு பதவியிலிருந்து விலகியதை வைத்துக்கொண்டே இந்தக் கயிறு திரிப்பு நடந்துள்ளது உண்மைகளைத் திரித்து கூறுவதால் தமிழ் மக்களை அதுவும் இன்று- திசைதிரும்பலாமென விமானத்துண்டுகள் எதிர்பார்ப்பின் அது மிகத்தவருன ஒன்ருகும். தமிழ்மக்கள்மீது அரசபடைகள் நடத்தும் கொலை, அட்டூழியங்களை நியாயப்படுத்திப் பார்க்கும் ஒரு வக்கிரமான, குரூரமான உள்நோக்கம் அத்துண்டுப் பிரசுரத்தில் தொனிக்கிறது.

இந்த அடக்கு முறைக்கும், ஒடுக்குமுறைக்கும், தாக்குதகளுக்கும், அட்டூழியங்களுக்கும், வதைகளுக்கும எதிராக நான் குரல் கொடுத்து வந்துள்ளமை தமிழ்பேசும் மக்களுக்குத் தெரிந்ததே. படையினரின் அத்துமீறல்களையும் அட்டூழியங்களையும் வன்மையாகக் கண்டித்தும், அவை காரணமாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து நான் ராஜினமாச் செய்ததும தெரிந்ததே. மேலேயிருந்து விழும இந்தத் துண்டுப் பிரசுரத்துக்கு என்ன மதிப்புக் கொடுக்க வேண்டுமென்பது பற்றி நான் எதுவும் கூறவேண்டியதில்லை தில்லுமுல்லுகள் என்றுமே வென்றதில்லை." (உ-இ)

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான திரு. ஐ ஆர். அரியரத்தினத்தின் 70-வது ஆண்டு நிறைவுவிழா நல்லூர் இந்து விடுதியில் பொன் குமாரசுவாமி தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

திருவாளர்கள்: அ. வைத்திலிங்கம், வி. அற்புதரத்தினம் எம். சி சுப்பிரமணியம், டொமினிக் ஜீவா எஸ் சிவபாதசுந்தரம், கலாநிதி சோ கிருஸ்ணராசா ஆகியோர் உரையாற்றுவார்கள். [இ]

* * *

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் செல்வி. ப. இராமநாதனின் சேவைநலப் பாராட்டு விழாவும் பிரியாவிடையும் இன்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## ஓராண்டு நினைவஞ்சலி



வைத்திய பூபதி டாக்டர்
**சுந்தரம்**
**வேலும்மயிலும்**
[ஜே. பி]

மண்ணகம்: 24-02-1930
விண்ணகம்: 07-08-1985
திதி: 27-07-86

எம் அன்புத் தலைவா! இருண்ட இவ்வுலகில் எமக்கு ஒளி விளக்காய்த் திகழ்ந்த தாங்கள் எம்மை இருளில் தவிக்கவிட்டு இறைவனிடம் சேர்ந்து ஓராண்டு ஆகின்றதையா, தங்கள் பிரிவை எண்ணி எண்ணிக் கண்ணீரும் கவலையும் சொள்கின்ரேம். தங்கள் ஒளி என்றும் எம்மில் நீங்கா நினைவாக நினைவின் நிழலாக துலங்க ஏங்கி உங்கள் பிரிவால் துயருறும் அன்பு உள்ளங்கள்.

மனைவி, மக்கள்,
உற்ருர், உறவினர்.

சுந்தரவேல் வைத்தியசாலை
அல்வாய் தெற்கு,
அல்வாய்.
C 3718

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

பிரஜைகள்குழு இணைப்புக குழுக் கூட்டம இன்றுகாலை நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவிருக்கிறது. [இ]

## சுவிஸில் செய்தி

சாவகச்சேரி, சனி

சுவிற்சர்லாந்தில் இருக்கும் தமிழர் இணைப்புச் செயலகம் 'செய்தி' எனும் தலைப்பிலான மாதாந்தப் பத்திரிகை ஒன்றினை வெளியிட்டு வருகின்றது.

சுவிஸில் இருக்கின்ற தமிழ் இளைஞர்கள் மத்தியில் இ பத்திரிகை மாதாந்தம்விநியோகிக்கப்பட்டு வருகிறது (இ)

## ரயில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வவனியாவில் காசுக்கட்டளை பெறுவது சிரமமாக இருக்கும் என்பதால் பிரயாணிகள் இங்கேயே காசுக்கட்டளைகளை எடுத்துச்சென்ருல் டிக்கட் பெறுவது வசதியாக இருக்கும் என்று கூறப்படுகின்றது. [ஆ]

## இலங்கை...

1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை அரசுடன் இது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு போராளி குழுக்கள் இடையூருக இருக்க மாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை அரசுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்திய பேச்சுக்கள் குறித்து போராளிகள் குழுக்களுடன் கலந்துரையாடவிருப்பதாககூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தனர். (து - இ)

## நன்றி கூறுகிருர் விஜயானந்தன்

யாழ்ப்பாணம்சனி

",தமிழ்பேசும் மக்களுக்கெதிராக அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் இனபபடுகொலைகளுக்கெதிராகக் கடந்தவெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட எதிர்ப்புத் தினத்தை வெற்றியாக்க உதவிய தமிழ்ப் பேசும் மக்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிரும்"

கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட எதிர்ப்புத் தினத்தையொட்டி தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான எதிர்ப்புக்குழு சார்பில் செயலாளர் எஸ் விஜயானந்தன் விடுத்துள்ள அறிக்கையில்மேற்கண்டவாறு நன்றி தெரிவித்துள்ளார்.

அந்த நன்றி அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; எதிர்காலத்திலும் மக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள ஐக்கியத்தையும் எழுச்சியையும் சீர்குலைய விடாது தொடர்ந்தும் எமது குழு காட்டும் முன்னேற்றமான பாதையில் மக்கள் செல்ல தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [வா-ஆ]


## கிறீன் பீல்ட் ரவல் ஒப்பரேட்டர்ஸ்
## Green Field Travel OPerators
### வெளியூர் தொலைபேசிச் சேவை

எங்கள் அன்பான வாடிக்கையாளர்களின் வசதிக்காக மீண்டும் வெளியூர் தொலைபேசிச் சேவையை ஆரம்பித்துள்ளோம். நியாயமான கட்டணத்தில் உங்கள் உடனடி வெளியூர் தொடர்புகளுக்கு எங்களை நாடுங்கள்.

உரிமையாளர்,
கிறீன் பீல்ட் ரவல் ஒப்பரேட்டர்ஸ்.

இல 96. நவீன சந்தை,
(மேல் மாடி) யாழ்ப்பாணம்.
தொலை பேசி 23875. (C 3726)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
ஞாயிற்றுக்கிழமை 27-7-86

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை இன்னிசைக் கச்சேரி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந் நிகழ்ச்சியில் சங்கீத பூஷணம் எஸ். தியாகராஜா போல் இன்னிசைக் கச்சேரி நடாத்துவார். [இ]

### கிளிநொச்சியில்
# வரலாறு காணாத மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

[நமது கிளிநொச்சி நிருபர்]
இலட்பட்டு கொலைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கிளிநொச்சியில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் பொதுக் கூட்டமும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது இப் பேரணியில் சுமார் இருபதினாயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.
ஊர்வலத்தில் சென்றோர் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் படுகொலைகளை ஆட்சேபித்தும் மாகாண சபைத்திட்டத்தை எதிர்த்தும் கோஷம் எழுப்பியவாறு சென்றனர்.
கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராமங்களிலும் இருந்து ஊர்வலங்கள் அணிஅணியாக புறப்பட்டு நண்பகல் முரசுமோட்டை மிஷன் ஆஸ்பத்திரிக்கு அருகிலுள்ள மைதானத்தை அடைந்தது.
கொதிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பாடசாலை மாணவ மாணவிகள் தாய்மார்கள் வயோதிபர்கள் இளைஞர்கள்யுவதிகள் கோஷங்களை எழுப்பியவாறு இவ் எழுச்சி ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்தனர்.
கிளிநொச்சியின் வரலாற்றில் மிகப் பெருந்தொகையானோர்கலந்து கொண்டபேரணி இதுவாகும்.
எந்தவிதப் போக்குவரத்து வசதியுமில்லாத முரசுமோட்டையிலிருந்தும் சுமார் 50 மைல்தொலைவிலுள்ள துப்புறுவில் கிராமத்திலிருந்தும் மக்கள் அணிஅணியாகச் சைக்கிள்களில் ஊர்வலமாகச்சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.
ஆயிரத்துக்கும் அதிகமான சைக்கிள்களும், நூற்றுக்கு மேற்பட்ட டிராக்டர்களும், லொறிகளும், கார்களும்கூட இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தன.
அன்றைய தினம் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல பாடசாலைகளும், திணைக்களங்களும், வர்த்தக ஸ்தாபனங்களும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கிளிநொச்சியில் எந்தவித பஸ்சேவைகளும் இடம்பெறவில்லை.
கிளிநொச்சி அத்தியாவசிய சேவைக் குழுவினரும், நாற்பது மேற்பட்ட பொது ஸ்தாபனங்களாலும் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த எதிர்ப்பு ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தில் வரலாறு காணாதஅளவுபொது மக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.
'மாகாணசபை எமக்கு வேண்டாம்', 'தமிழ் ஈழமே எமக்கு வேண்டும்.'
'பேச்சுவார்த்தை ஒருபுறம், இனப்படுகொலை மறுபுறம்'.
'83-ல் பார்த்தசாரதி, 85-ல் பண்டாரி, அடுத்து சிதம்பரம், இப்போது அமிர்தலிங்கமா?'
'இந்தியாவே எமது போராட்டத்தை அங்கீகரி.' போன்ற சுலோகங்களுடன் மக்கள் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. (எ-இ)

## “இந்தியா தீர்வுமுயற்சியை தீவிரமாக்கவேண்டும்”

புதுடில்லி, ஜூலை 26
'இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக இந்திய அரசு எடுத்துவரும் முயற்சிகள் மேலும் தீவிரமாக்கப்படவேண்டும்' என்று கிராமிய தொழிற்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.
இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை புதுடில்லியில் நேற்று சந்தித்தபோது திரு. தொண்டமான் இவ்வாறு பிரதமரைக் கேட்டுக் கொண்டார்.
இலங்கை அரசுடன் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நடத்திய பேச்சுக்கள் குறித்து பிரஸ்தாபித்த திரு. தொண்டமான் தற்போது ஏற்பட்டிருக்கும் தீர்வுக்கான சுமூக சூழ்நிலையை பயன்தரத் தக்க வகையில் செயற்படுத்தவேண்டும். என்றும் அவர் கூறினர்.
திரு. தொண்டமான் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சிவ்சங்கரையும் இணையமைச்சர் திரு கே. ஆர் நாராயணனையும் வெளியுறவுக் கொள்கைத்தலைவர் திரு ஜி. பார்த்தசாரதியையும் சந்தித்துப் பேசினர்.
குடியரசு துணைத்தலைவர் திரு. ஆர், வெங்கட்ராமனையும் அவர் மரியாதை நிமித்தம் சந்தித்தார். [து-இ]

## ‘தமிழரின் தாயகப்பகுதிகள் ஒன்றிணைக்கப்படவேண்டும்’
### —நவசமசமாஜக்கட்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு
தமிழர்களின் தாயகமாக கருதப்படும் பகுதிகளை ஒன்றிணைத்து தனிப் பிராந்தியமொன்றை ஏற்படுத்துவது தமிழ் பிரிவையும் உள்ளடக்கிய இனமத பேதமற்ற தேசிய இராணுவத்தையும் ஏற்படுத்த வேண்டும்.
இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இவ் அடிப்படை திட்டங்களே முக்கியமானதாகுமென்று நவசமசமாஜக்கட்சி த. வி. கூட்டணியை சந்தித்த போது இதனை தெரிவித்துள்ளது.
இவ் விடயம்குறித்துகருத்து வெளியிட்ட த. வி. கூட்டணியினர், இவைஇரண்டும்செயல்படுத்த படுமாயின்பிரச்னையை பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பது சுலபமாகும் என்று அவர்களிடம் தெரிவித்தனர் [சி-எ]

## தபால் பொதிகள் இன்று வந்து சேரும்

வவனியா ஞாயிறு
கொழும்பில் தேங்கிக்கிடந்த யாழ் மாவட்டத்திற்குரிய தபால் பொதிகள் நேற்று வவனியாவிற்கு ரயிலில் எடுத்து வரப்பட்டன.
வவனியா ரயில் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் இத் தபால் பொதிகள் இன்று பஸ் மூலம் யாழ்.தபால் நிலையத்திற்கு எடுத்துவரப்படும். (மா-இ)

## ரயில் பயணிகள் குறைவு

வவனியா ஞாயிறு
கொழும்பிலிருந்து புறப்பட்ட ரயில்நேற்றுகாலை 11-15 மணிக்கு வவனியா ரயில் நிலையத்தை வந்தடைந்தது.
இந்த ரயிலில் 164 பிரயாணிகள் இருந்தனர். இந்த ரயில் வவனியாவிலிருந்து நேற்றுப் பிற்பகல் 2-40க்கு கொழும்புக்கு புறப்பட்டபோது மிகக்குறைவான பிரயாணிகளே சென்றனர். [மா-இ)

## புதிய இராணுவ முகாம்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு
திருமலை - பொலநறுவை மாவட்ட எல்லையில் புதிதாக ஐந்து இராணுவமுகாம்கள் நிறுவப்பட்டுள்ளன.
மீகல்வேவ, பள்ளியகொடல்ல மீகொல்லாவ, அங்கவிவ கெகுலுவேவ ஆகிய இடங்களிலேயே இப்புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. [சி-எ]

## 1000 பெண் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஞாயிறு
இலங்கையின் சகல பகுதிகளிலிருந்து புதிதாக ஆயிரம் பெண் பொலிஸார்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்
இப்பதவிக்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 15 000 பெண்கள் விண்ணப்பித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. [சி-எ]

## கோப்பாய் ஊடாக வாகனங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு
கோப்பாய் பாலம் திருத்தப்படுவதைத்தொடர்ந்துபஸ் கார் உட்பட சகலவாகனங்களும், நேற்று முதல் மீண்டும் கோப்பாய் ஊடாக செல்கின்றன. [இ-எ]

## இடம் பெயர்ந்த பரீட்சார்த்திகளுக்கு விசேஷ அனுமதி அட்டை

யாழ்ப்பாணம். சனி
அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் க.பொ.த உயர்தரபரீட்சைக்கு விண்ணப்பித்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் அனுமதி அட்டைகள் பெறாதவர்கள் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.
இடம்பெயர்ந்த பரீட்சார்த்திகளுக்கான விசேஷ அனுமதி அட்டைகள் இம்மாதம் 30 ம் திகதி யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தில் வழங்கப்படும் இத்தகைய பரீட்சாத்திகள் யாழ்ப்பாணம் கல்விப்பணிப்பாளர், இரா. சுந்தரலிங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ச எ]

## திருமலையிலிருந்து 50 இளைஞர்கள் பூஸாவுக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு
திருமலையில் கைது செய்யப்பட்டு திருமலை கோட்டை முகாமுக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 50 இளைஞர்கள் பூஸாமுகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.
இச்சம்பவத்தையிட்டு கவலையடைந்திருக்கும் பெற்றோர் படித்து முடித்துவிட்டு தமது வீடுகளிலிருந்த அப்பாவி இளைஞர்களே கைது செய்யப்பட்டவர்கள் என்றும் இவர்களை விடுதலை செய்யும்படியும்கோரி பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளனர்,
கடந்த மாதம் 24ம் திகதியும் இம் மாதம் 9ம் திகதியும் இடம்பெற்ற ஆயுதப் படையினரின் சோதனையின் போது வீடுகளில் வைத்து கைது செய்யப்பட்ட இளைஞர்களே பூஸா முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டவர்களாவர். [மா-எ]

## வாகனங்கள் ஓமந்தையுடன் திரும்பின

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றுப் புறப்பட்ட பஸ், லொறி மற்றும் வாகனங்கள் யாவும் ஓமந்தைக்கு அப்பால் செல்லவில்லை பல வாகனங்கள் திரும்பிவந்தன.
வவனியாவிலிருந்து அநுராதபுரம் சென்ற இ. போ. ச, பஸ்ஸில் கடந்த வியாழனன்று பார்சல் குண்டு வெடித்த சம்பவத்தைத் தொடர்ந்து நிலவிய பதற்றம் காரணமாக வாகனங்கள் எதுவும் செல்லவில்லை. [ச-எ]

## மரண அறிவித்தல்

### மாவிட்டபுரம் சிவஸ்ரீ கு. பஞ்சநதக்குருக்கள்

மாவிட்டபுரம் சிவஸ்ரீ கு. பஞ்சநதக்குருக்கள் 25-7-86 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் பாலாம்பிகை அம்மாளின் அன்புக் கணவரும் மாவையாதீனத்தைச் சார்ந்த காலஞ்சென்ற குருமணி குமாரசாமிக் குருக்களின் (செல்லக்குருக்கள்] மூத்த புதல்வரும், சிவஸ்ரீ கு. இரத்தினசபாபதிக் குருக்கள். காலஞ்சென்ற கு. பாலசுந்தரக் குருக்கள், பிரம்மஸ்ரீ கு. பூர்ணனந்தா ஆகியோரின் சகோதரரும், சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள், பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா [யோகானந்தம்] இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி கமலாதேவி, லலிதாம்பிகை ஆகியோரின் அன்புத் தகப்பனரும், சிவஸ்ரீ ந. மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ கா தியாகராஜக்குருக்கள், சாரதா, சந்திரா ஆகியோரின் பிரிய மாமனரும், ஜெயதேவி, கணேசசர்மா, பஞ்சநதசர்மா, பவானி, மகாலட்சுமி, சிவாஷிணி. தேவசேன, கார்த்திகேயன், கல்பன கோகுலகிருஷ்ணன் ஆகியோரின் அருமைப் பாட்டனரும் ஆவர். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 26-7-86 சனிக்கிழமை காலை 6-00 மணிக்கு மாவிட்டபுரத்தில் நடைபெற்றும் தகனக்கிரியைகள் கீரிமலை செம்பொன் வாய்க்கால் மயானத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

[C 3728] தகவல்: ப. மகேஸ்வரக்குருக்கள்.

### கந்தசாமி கற்பித்தான் சபாபதி

அளவெட்டி தெற்கு தம்மளையைச் சேர்ந்த கற்பித்தான் சபாபதி (சர்வோதயம் அநுராதபுரம்,யாழ்ப்பாணம்) காலமாகிவிட்டார். இவர் சபாபதி கந்தசாமி சீதாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், சரஸ்வதியின [ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி கோப்பாய்] அன்புக் கணவரும், அரவிந்தன்,ஆர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரகாந்தி தில்லைநாதன், இந்திராதேவி செல்வராசா, செல்வி சந்திரலேகா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-7-86 இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2-00 மணியளவில் அளவெட்டி தெற்கு குடும்ப மயானத்தில் நடைபெறும்.

தகவல்: ச. கந்தசாமி [C3721]

## மரண அறிவித்தல்

### திருமதி தையல்நாயகி

திரு. வி. நடராஜா அவர்களின் (நல்லூர், சாமுவேல் அன் சன்ஸ்) அருமை மனையாரும், திரு. ந. ஜெபகுமாரன், திரு. ந. விஜயகுமாரன் (மேற்கு ஜேர்மனி), செல்வி ந. விஜயரஞ்சனி (திருஞானஸ்) ஆகியோரின் அருமை அன்னையாரும், திருமதி ஜெ. ஜசோதா அவர்களின் அருமை மாமியாருமாகிய திருமதி தையல்நாயகி நடராஜா அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (27-7-86) பகல் 10மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வி. நடராஜா,
'தாய்அகம்'. ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
(C 3733)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜுலை மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.